Registered as a Newspaper | பக்கங்கள் 16 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 321

வெள்ளிக்கிழமை 13 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 26 ஆம் நா




# எப்படி நடந்தது இறுதிப்போர்? இலங்கை வெள்ளை அறிக்கை



## ஜெனிவாவுக்குப் பதிலடியாம்

**கொழும்பு, ஒக்ரோபர் 13**

**இலங்கையில் எவ்வாறானதொரு போர் இடம்பெற்றது என்பதை விளக்குவதற்காகத் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை ஜெனிவாவில் சமர்ப்பிப்பதற்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என்று தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

»15

## மீண்டும் புலிகள்!

கதைவிடுகிறார் சரத் வீரசேகர

கொழும்பு, ஒக். 13

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் தலைதூக்கி வருவதாக இந்தியாவிலிருந்து எமக்குப் புலனாய்வுத் தகவல் கிடைத்

»15

## புலிகள் புதைத்த தங்கமாம் வவுனியாவிலும் வேட்டை

வவுனியா, ஒக். 13

புதியகோவில்குளத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் மற்றும் தங்கம் மறைத்து வைத்திருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பல இடங்

»15

## விக்ரர் நினைவுநாள்



மன்னார், ஒக். 13

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் மன்னார் மண் பெற்றெடுத்த மகத்தான மாவீரன் லெப். கேணல் விக்ரரின் 37 ஆம் ஆண்டு நினைவு நாள் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சார்ல்ஸ் நிர்மலநாதன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. (அ-ஒ-56)

6 நாள் காய்ச்சல்

## இளம் குடும்பப்பெண் பரிதாபகரமாகச் சாவு!

யாழ்ப்பாணம், ஒக். 13

6 நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை வாடி ஒழுங்கையைச் சேர்ந்த சிவரூபன் தேனுசா (வயது - 24) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவருக்கு ஒரு குழந்தையும் உண்டு.

»15

## வடக்கின் நிலைமை மகிழ்ச்சி! பிரிட்டன் அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக பிரிட்டன் அமைச்சர் அன் மேரி பெலிண்டா ரவேலியன் தெரிவித்துள்ளார்.

»15

இந்திய இராணுவத்தின்

## பிரம்படிப் படுகொலை நினைவு கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணம், கொக்குவில் பிரம்படிப் படுகொலையின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கொக்குவில் பிரம்படிப் பகுதியிலுள்ள நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

»15

## யானை தாக்கி ஒருவர் காயம்

முல்லை., ஒக். 13

யானைத் தாக்குதலுக்கு இலக்கான குடும்பத்தலைவர் ஒருவர்

»10

## எந்தவித அச்சுறுத்தலும் நீதிபதிக்கு இல்லையாம்!

அவரிடம் வாக்குமூலம் பெறாமலேயே குற்றப்புலனாய்வுப் பிரிவு அறிக்கை

கொழும்பு, ஒக். 13

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் அல்லது வேறு எந்தவகையிலும் அச்சுறுத்தல் விடுக்கப்படவில்லையெனவும், அவரது திடீர் வெளிநாட்டுப் பயணமானது முன்கூட்டியே

»15

## சீனப் பயணத்துடன் கடன் சீரமைப்பு வெற்றி

கூறுகிறது ரணில் தரப்பு

கொழும்பு, ஒக். 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீனப்பயணத்தின் பின்னர், இலங்கையின் கடன் மறுசீரமைப்புத் திட்டம் வெற்றியளிக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள்

»15

படையினர் வசமுள்ள

## விவசாயக் காணிகள் விடுவிக்கப்படலாம்!

மாவட்டச் செயலர் எதிர்வுகூறல்

யாழ்ப்பாணம், ஒக். 13

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள விவசாயக் காணிகளில் ஒரு தொகுதிக் காணிகள் இந்தப் போகத்துக்காக விடுவிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

»15

## தமிழர்களுக்குத் தீர்வு பிரிட்டன் ஆர்வம்

அந்த நாட்டு அமைச்சரை சந்தித்த தமிழ் எம்.பி.க்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் பிரிட்டன் ஆர்வமாக இருக்கின்றது என்பதை அந்த நாட்டின் அமைச்சர் அன் மரியாவுடனான சந்திப்பில் உணரக் கூடியதாக இருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

»10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் எதிர்க்கட்சிகளிடம் பாடம் கற்க வேண்டுமாம்!

## எதிர்க்கட்சிகளுக்கு கூறுகிறது பெரமுன

**கொழும்பு, ஒக்.13**

**இஸ்ரேல் எதிர்க்கட்சிகளிடமிருந்து இலங்கையில் உள்ள எதிர்க்கட்சிகள் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.**

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளதாவது:-

தேசிய முக்கியத்துவம்மிக்க பிரச்சினையின்போது அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகவேண்டும். இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டும் என்று அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு மத்தியில் குறைந்த பட்ச பொது இணக்கப்பாட்டுடன் புதிய அமைச்சரவையுடன் அவசர அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காசாவில் மட்டுமல்ல இந்தப் பூமியில் இருந்தே ஹமாஸ் அமைப்பு முழுமையாக அழிக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டாக அறிவித்துள்ளனர். இஸ்ரேல் அரசு தனித்து விடப்படவில்லை, எதிரணியும் உடன் உள்ளது என்ற செய்தி இதன் மூலம் வழங்கப்பட்டுள்ளது. புதிய அரசின்கீழ்தான் தேசியப் பிரச்சினைக்கு இஸ்ரேல் முகம்கொடுக்கின்றது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்தவேளை, இந்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுத்தார். ஜனாதிபதிபதவியைத்தவிர அமைச்சரவையில் பிரதமர் உள்ளிட்ட ஏனைய பதவிகளை ஏற்று குறுகிய காலத்துக்கு பொது இணக்கப்பாட்டு அரசை அமைக்க முன்வர வேண்டும் என்று கோரினார். வாய்மூலம் மட்டுமல்ல எழுத்துமூலமும் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தார். ஆனால் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன இதற்குச் சாதகமான பதிலை வழங்கவில்லை. தேசியப் பிரச்சினையொன்று ஏற்பட்ட வேளை அரசியல் தியாகங்களுக்கு மத்தியில் அப்போது ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்ச விடுத்த அழைப்பை மேற்படி தரப்புகள் நிராகரித்தமை பாரதூரமான விடயமாகும். ஹமாஸ் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தும்வரை மொசாட் அமைப்பு தூங்கிக் கொண்டு இருந்ததா, ஜனாதிபதிப் பதவியைத் துறக்கவும் என இஸ்ரேல் நாட்டு எதிரணிகள் கூறினவா? ஆனால் எமது நாட்டு கட்சிகள் அவ்வாறு கோரின.

எனவே, இது தொடர்பில் எமது நாட்டு மக்கள் சிந்திக்கவேண்டும். தேசிய முக்கியத்துவம்மிக்க பிரச்சினை யின்போது அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் - என்றார். (எ-44)

# புலிகளிடம் செல்லாததால் பெரமுனவில் இணையலாம்

## சஞ்சீவ எதிரிமான்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.12

சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் இருந்து சென்றவர்கள், ஹமாஸ் அமைப்புக்கோ அல்லது புலிகள் அமைப்புக்கோ செல்லவில்லை. அவர்கள் எதிரணியில்தான் உள்ளனர். அவர்கள் மீண்டும் கட்சிக்கு வருவதில் பிரச்சினைஇருக்காது என்று பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

எமது அணியில் இருந்து சென்றவர்கள், எதிரணி அரசியலை முன்னெடுத்தனர். கடந்த காலங்களில் அரசில் இருந்து வெளியேறிச் சென்றவர்கள், மீண்டும் அரசு பக்கம் வந்த சம்பவங்களும் உள்ளன. எமது அணியில் இருந்து அவர்கள் புலிகள் பக்கமோ, ஹமாஸ் அல்லது ஐ.எஸ்.ஐ. எஸ். பக்கமோ செல்லவில்லை. அதே நாடாளுமன்றத்தில் எதிரணி பக்கம் உள்ளனர். எனவே அவர்கள் மீண்டும் வருவதில் பிரச்சினை இல்லை. அவர்களுடன் இணைந்து போட்டியிட நான் விரும்புகின்றேன். எமது தரப்பில் இருந்து இரு கரங்களும் நீட்டப்பட்டுள்ளன- என்றார். (எ-44)

# தோட்டத் தொழிலாளர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டம்

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் உடப் புஸ்ஸல்லாவ தோட்டத்தின் மூன்று தொழிலாளர்கள் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் மதியம் முதல் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேகாலை பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ் இயங்கும் 4 தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், நீண்ட காலமாக தமக்கு வழங்கப்படாதுள்ள பங்கு இலாபத்தைத் தோட்ட நிறுவனம் வழங்கவேண்டும் என வலியுறுத்தியேஇந்தஉணவுதவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (எ-இ)

# தடைசெய்யப்பட்ட பொலித்தீனை பயன்படுத்தினால் நடவடிக்கை

## சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்ப்பாணம் மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது-

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 13 தடவைகள் விசேட சோதனை நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பரவலாக 205 கடைகளில் முன்னெடுக்கப்பட்டன. 14 உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 20 மைக்ரோனுக்குக் குறைவான பொலித்தீன், உக்கமுடியாத பொலித்தீன், வன்டே கப், பிளாஸ்ரிக் ஸ்ரோ, பிளாஸ்ரிக் இடியப்பத்தட்டு, பிளாஸ்ரிக் பூமாலை, கரண்டி, பொதியிடலுக்காகப் பயன்படும் கவர் இவற்றை உடைமையில் வைத்திருத்தல் பாவனைக்குட்படுத்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்- என்றார். (எ-125)

# மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஆணைக்குழு முன்னோடித் திட்டம்

## யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 13

மாற்றுத்திறனாளிகள் தேர்தல்களின்போது வாக்களிப்பதில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்கவின் தலைமையில் முன்னோடித் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதுதொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் நிரந்தர இயலாமை தொடர்பாக அடையாளம் காணமுடியாத நபர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு வாக்களிப்பு வசதியை இலகுபடுத்தும் வகையில் தற்காலிக அடையாளஅட்டை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

கலந்துரையாடலில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க ,யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் அமல்ராஜ், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன், யாழ். மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன், பவ்ரல் அமைப்பின் தேசிய இணைப்பாளர் சுஜீவ கஜநாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ச-125)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டமைப்பினரின் ஏற்பாட்டில் தொழிற்சங்க ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை பல்கலைக் கழக முன்றிலில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

12 வீத சம்பளக் கொடுப்பனவு வழங்காத நிலையில் ஊழியர் சேமலாப் நிதியிலும் அரசாங்கம் கை வைக்கின்றமையைக் கண்டித்து இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-125)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தல்முறை மாற்றத்தால் தெற்கு அரசியலில் குழப்பம்

கொழும்பு, ஒக்.13

**நிறைவேற்று அதிகாரமுறைமையை நீக்குவதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் தொடர்பில் அரசியல் வட்டாரங்களில் பெரும் குழப்ப நிலைமை தோன்றியுள்ளது.**

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் எந்த வேட்பாளரும் அல்லது கட்சியும் 50 வீத வாக்குகளைப் பெறமுடியாது என்பதால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜனாதிபதிக்கும் நீதியமைச்சருக்கும் இடையில் ஏற்கனவே இதுதொடர்பில் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்றும், தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான அமைச்சரவைப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. அமைச்சரவைப்பத்திரம் இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதி எனவும் இறுதியாக நிறைவேற்று அதிகாரமுறையை நீக்குவதா நிறைவேற்று அதிகார பிரதமர் ஊடாக நாடாளுமன்றத்தை வலுப்படுத்துவதா என்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் வெளிவந்திருக்கும் நிலையில், பிரதான எதிர்க்கட்சிகள் ஏற்கனவே தங்கள் மத்தியில் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளன. அரசின் இந்த நடவடிக்கையை நாடாளுமன்றத்தில் எதிர்ப்போம் என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

2025 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல்வரை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீடிக்கவேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜனபெரமுன கருதுகின்றது. தற்போதைய அரசாங்கம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை தொடர்வதற்கான ஆணையைப் பெற்றது என்றே பொதுஜனபெரமுன கருதுகின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதென்றால் 2025ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னரே நீக்கவேண்டும். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்கவேண்டும் என பொதுஜனபெரமுன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை நீக்கப்படவேண்டும் என எப்போதும் குரல் கொடுத்துவந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியும் தற்போதைய முயற்சிகளை நாடாளுமன்றத்தில் எதிர்க்கும் எனத் தெரியவருகின்றது. பொதுத்தேர்தலின் பின்னரே இந்த விடயம் ஆராயப்படவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியும் கருதுகின்றது. அடுத்த அரசாங்கம் மக்களின் ஆணையுடன் பதவிக்குவரும். அதுவரை நாங்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை ஒழிப்பது தொடர்பாகச் சிந்திக்கமுடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்றஉறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

(எ-இ)

# பெரமுனவோடு ஒத்துழைத்தால் நிம்மதியாக இருக்கலாம் ரணில்

## ஆளும்கட்சி எம்.பி. சந்திரசேன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13

கோத்தாபய ராஜபக்சவின் தவறான நிர்வாகத்தால் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கமும், கட்சியும் பலவீனமடைந்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்முடன் இணக்கமாகச் செயற்பட்டால் முரண்பாடற்ற வகையில் அரச நிர்வாகத்தை முன்னெடுக்கலாம்.

- இவ்வாறு ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது-

சர்வதேச நாணயநிதியத்தின் கடனுதவியை மாத்திரம் பிரதான இலக்காக அரசாங்கம் கொண்டுள்ளதேதவிர தேசிய தொழில்துறையை மேம்படுத்த எந்த நடவடிக்கைகளையும் இதுவரை முன்னெடுக்கவில்லை. இதை பிரதான குறைபாடாகக் கருதுகிறோம்.

பெரும்போக விவசாயம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரும்போக விவசாயத்தை பயனுடையதாக்கிக் கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம். பொதுஜன பெரமுனவுடன் ஜனாதிபதி இணக்கமாக செயற்பட்டால் அவரால் அரச நிர்வாகத்தை ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் வரை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும்.

ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன்செயற்பட்டுள்ளார்கள். அவர்கள் புறக்கணிக்கப்படும்போது அதிருப்தியடைந்து எதிர்ப்புத் தெரிவிப்பது இயல்பானதே - என்றார். (எ-இ)

# சூட்டுக்கு இலக்கானவர் உயிரிழப்பு

மீட்டியாகொடவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கை ஒன்றில் கைது செய்ய முயன்றபோது விசேட அதிரடிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சூட்டிலேயே சந்தேகநபர் படுகாயமடைந்திருந்தார். பலப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# பட்சி தினம் தெரியுமோ?

எங்கட வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குள்ள இருக்கிற பள்ளிக்கூடங்களில இந்தக் கிழமை ரண்டாம் தவணைச் சோதினையள் தொடங்கிட்டுது. இது முதலே போட்ட 'எக்ஸாம் ரைம் ரேபிள்' தான். ஆனால் மற்ற மாகாணங்களில இந்தத் தவணைச் சோதினையளை தள்ளி வைச்சிருக்கினம். அதுக்கு ரண்டு காரணம் இருக்கு. டிசம்பரில நடக்க இருந்த ஏ.எல். எக்ஸாம் ஜனவரிக்குத் தள்ளிப்போனதாலையும், அங்காலிப் பக்கங்களில கடும் மழை, வெள்ளத்தாலையும் தவணைச் சோதினையளை பின்னுக்கு வைப்பம் எண்டு முடிவெடுத்திருக்கினம். ஆனால் முதலே போட்ட அதே ரைம் ரேபிளில தான் எக்ஸாம் வைப்பம் எண்டு வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் மட்டும் ஒற்றைக்காலில நிக்குது.

சரி, இப்பிடி எக்ஸாம் வைச்சால் என்ன நட்டம்? அவையள் வைச்சிட்டுப் போகட்டுமே? எண்டு சிலர் கேக்கலாம். ஆனால் நட்டம் இருக்குத்தான். இந்தமுறை தவணைச்சோதினையள் நடக்கிற காலத்துக்குள்ளதான் நவராத்திரி வருகுது. எங்கட பள்ளிக்கூடங்களில நவராத்திரி எண்டால், கும்பம் வைச்சு, நவதானியம் விதைச்சு, ஒவ்வொரு நாள் பூசையும் ஒவ்வொரு வகுப்புக்கு ஒதுக்கி, அந்தந்த நாளில அந்த வகுப்புப் பிள்ளையளின்ர கலைநிகழ்ச்சியளை வைச்சு, ஆயுதபூசையண்டைக்கு புத்தகத்தை வைச்சுப் பூசை செய்யிறதெல்லாம் வழக்கம். வெறும் ஒரு சமயவிழா எண்டதைத் தாண்டி, பள்ளிக்கூடப் பிள்ளையளிட்ட இருக்கிற கலைத்திறமையளை வெளியில கொண்டு வாறதுக்கும், கூட்டாச் சேர்ந்து ஒரு நிகழ்ச்சியை நடத்திற 'லீடர்ஷிப்பை' கொண்டு வாறதுக்கும், எங்கட கலாசாரத்தில உள்ள தோரணம் கட்டுறது, மாலை கட்டுறது எண்டதுகளைப் பழகிக்கொள்ளவும் இந்த நவராத்திரியைத்தான் எல்லாப்பள்ளிக்கூடக்காரரும் பாவிக்கிறவை. அதாலநவராத்திரிக் காலத்தில அநேகமா அரைநேரம் தான் வகுப்பு நடக்கும். காலமை பூசை, கலைநிகழ்ச்சியள் நடக்கும். மிச்ச நேரத்தில பிள்ளையள் டான்ஸ், நாடகம், பாட்டு, பேச்சு எண்டு அடுத்தநாள் தாங்கள் செய்யப்போற நிகழ்ச்சியளை ஒத்திகை பார்ப்பினம். தோரணம் பின்னி, மாவிலை பிடுங்கி, மண்டபத்தைக் கழுவி அடுத்த நாள் பூசைக்கும் அடுக்குச் செய்வினம். இப்பிடியே இந்த 9 நாளும் பிள்ளையளும், ரீச்சர்மாரும் சேர்ந்து பள்ளிக்கூடச் சூழலையே கலகலப்பா மாத்திப்போடுவினம். வெறும் ஏட்டுப்படிப்பை விடவும் , இப்பிடியான விசயங்கள் தான் பிள்ளையள் எதிர்காலத்தில தங்கட காலில நிக்கிறதுக்கும், தங்கட திறமையை வெளியில கொண்டுவாறதுக்கும் தேவை. அதோட நவராத்திரி எங்கட தமிழ்ப் பண்பாட்டில பிரிக்கமுடியாத அளவுக்கு, முக்கியமான ஒண்டு. வேதக்காரப் பிள்ளையள் படிக்கிற பள்ளிக்கூடங்களில கூட நவராத்திரியைக் கொண்டாடுகினம் எண்டால், அதின்ர முக்கியத்துவத்தைப் பாருங்கோவன்.

இப்பிடிப்பட்ட நவராத்திரிக் காலத்தில எக்ஸாமை வைச்சால் பிள்ளையள் என்னெண்டு பூசைக்கு ஆயத்தப்படுத்தும்? என்னெண்டு அவை கலைநிகழ்ச்சியளைப் பழகுவினம்? என்னெண்டு தோரணம், மாவிலை கட்ட நேரம் கிடைக்கும்? மற்ற இடங்களில ஒத்திவைச்ச மாதிரி, வடக்கிலையும் இந்த நவராத்திரி முடிய எக்ஸாமை வைச்சிருக்கலாமே. ஏ.எல். எக்ஸாம் பின்னுக்குப் போனதால, தவணைச் சோதினையையும் கொஞ்சம் தள்ளி வைக்கிறதில எந்தக் கரைச்சலும் இல்லையே? இப்ப சரஸ்வதி பூசை நடக்கிற மூண்டுநாளும் எக்ஸாம் நடக்காது எண்டு ஆளுநர் சொல்லியிருக்கிறாவாம். சரி, 9 நாளும் இல்லாட்டியும் இந்த மூண்டுநாளுமாவது பிள்ளையள் பழையபடி நவராத்திரியைக் கொண்டாடட்டும். ஆனால் இனியாவது கொஞ்சம் யோசிச்சு, சூழ்நிலைக்கேத்த மாதிரி கொஞ்சம் தங்களையும், திட்டங்களையும் மாத்திப் பழகோணும் எங்கட டிப்பார்ட்மெண்ட்காரர்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர்ப் பிரதேசசபையின் கொக்குவில் பொதுநூலகத்தால் வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய வலுவூட்டல் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை சமூக சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரஜிபன் தர்மினி தலைமையில் கொக்குவில் ராமகிருஸ்ணா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. (ச)

மெசிடோ பங்களிப்பில்

# கண்டி கண்காட்சியில் வடக்கின் உற்பத்திகள்



மன்னார், ஒக். 13

மெசிடோ நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் கண்டியில் 3 நாள்கள் நடைபெற்ற கண்காட்சியில் மன்னார்த் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் காட்சிப் படுத்தப்பட்டன.

மன்னார் உற்பத்திகளுக்கு சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இந்தக் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை கண்டியில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில் மன்னார் சுயதொழில் முயற்சியாளர்களின் பனை உற்பத்திப் பொருள்கள், சவர்க்கார உற்பத்தி உள்ளிட்ட பல்வேறுபட்ட உற்பத்திகள் காட்சிப்படுத்தப்பட்டன.

இதேவேளை உள்ளூர் உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வகையில் சர்வதேசக் கண்காட்சி இந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் நவம்பர் இரண்டாம் திகதி வரை வியட்நாம் நாட்டில் நடைபெறவுள்ளது. (ச-60)



அஞ்சல்தினக் கிரிக்கெட்

# கரவெட்டி பிரதேச செயலகம் 36 ஓட்டங்களால் வென்றது!

யாழ்ப்பாணம், ஒக். 13

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை தபாலகத்தில் வடமராட்சிக்குட்பட்ட அரச நிறுவனங்களுக்கு இடையிலான கிரிக்கெட் ஆட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணி 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

8 அணிகள் கலந்துகொண்ட இந்தத் தொடரின் இறுதியாட்டத்தில், கரவெட்டிப் பிரதேச செயலக அணியும் வல்வெட்டித்துறை தபாலக அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டிப் பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 63 ஓட்டங்களைப் பெற்றது. கி.கஜீபன் 36 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வல்வெட்டித்துறை தபாலக அணி 5 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 27 ஓட்டங்களைப் பெற்றது. இதையடுத்து கரவெட்டிப் பிரதேச செயலக அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் கு.செந்தில்குமார், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் மா.முரளி, பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பியந்த, வல்வெட்டித்துறை தபாலதிபர் ரகுபதி ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-17)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகி முடியும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்தவும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** மனதில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். இளைய சகோதரர்கள்மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்** : மனதில் உற்சாகமாகவும் செயல்களில் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பொறுமை அவசியம்.

**கடகம்:** உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். அவ்வப்போது மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும். வியாபாரத்தில் உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** : தேவையான பணவரவு கிடைக்கும் என்றாலும் பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும். அவ்வப்போது மனதில் சோர்வு உண்டாகும். உறவினர்களின் வருகையால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். குழப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** பிறருக்குக் கொடுத்து நீண்டகாலமாகத் திரும்பவராத கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் முடிந்துவிடும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். ஆனால், தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். உறவினர்கள் வகையில் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.



# கிழக்குப் பல்கலை பட்டமளிப்பு நிகழ்வு

மட்டக்களப்பு, ஒக். 13

இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்தப் பொதுப் பட்டமளிப்பு நிகழ்வு கடந்த வாரம் இடம் பெற்றது.

வந்தாறுமூலையில் அமைந்துள்ள பல்கலைக்கழக பிரதான வளாக நல்லையா மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கத்தின் நெறிப்படுத்தலில் கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் ஓய்வுபெற்ற பேராசிரியர் மா.செல்வராஜாவின் தலைமையில் நடைபெற்ற இந்தப் பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 760 பேர் பட்டங்களைப் பெற்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுசாலைகளின் நிலுவை அரசாங்கம் காலக்கெடு!

கொழும்பு, ஒக். 13

**வரி நிலுவைத் தொகையை செலுத்தத் தவறிய மதுபான விற்பனை நிறுவனங்கள் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக வரி நிலுவைத் தொகையைச் செலுத்தவேண்டும். தவறின் நிறுவனங்களின் உரிமம் இரத்துச் செய்யப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

மதுவரித் திணைக்களத்தில் இடம் பெற்ற பொதுக்கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டது.

வரிகள் குறிப்பிட்ட காலத்தினுள் அறவிடப்படவில்லை என தொடர்ச்சியாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் மதுபானசாலைகளின் நிலுவைத்தொகைக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மொத்த நிலுவைத் தொகை 6.2 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 2.5 பில்லியன் ரூபா வரி நிலுவைத் தொகையாகக் கணக்கிடப்பட்டுள்ளது, எஞ்சிய 3.8 பில்லியன் ரூபா தாமதக் கட்டணமெனக் கணக்கிடப்பட்டுள்ளது என்றும் மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)



## தென்மராட்சியின் அபிவிருத்தி ஆளுநருடன் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் , ஒக் 13

தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பில் தென்மராட்சி அபிவிருத்திக்கழகப் பிரதிநிதிகள் ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் விபத்து மற்றும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவை உடனடியாக இயங்க வைத்தல், மனித மற்றும் பௌதிக வளங்களின் தேவைகள் தொடர்பான பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

மேலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் இன்னமும் அபிவிருத்தி செய்யப்படாத, அபிவிருத்தித் தடைகள் இருக்கும் நகரப் பூங்கா, பொது மைதானம் மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான பல விடயங்களும் ஆராயப்பட்டன.

இவை தொடர்பில் சாதகமான முடிவுகளை உடன் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன் என்று ஆளுநர் உறுதியளித்தார்.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் அ.கைலாயபிள்ளை, ஐக்கியராச்சிய தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் தலைவர் மருத்துவர் ஆ. புவிநாதன், செயலாளர் மற்றும் சுகாதாரத் துறைக்கான உபகுழுத் தலைவர் மருத்துவர் த.குகதாசன் ஆகியோர் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (ச-9)

## வகுப்பேற்றத்துக்கு வரவு மிகஅவசியம்

கொழும்பு, ஒக். 13

மாணவர்களின் வகுப்பேற்றத்துக்குப் பாடசாலை வரவு கட்டாயமாக்கப்படவுள்ளது என்று கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு தரம்-4,5 இல் கல்வி பயிலும் போது சில கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்தக் கணிப்பீடுகள் தரம்-5 புலமைப்பரிசில் புள்ளிகளுடன் சேர்க்கப்படும். மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் பல்துறைச் செயற்பாடுகள் என்பன தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும். தற்போதைய கல்வி முறை மாற்றப்படவுள்ளது - என்றார். (ம-6)

## யாழ்.பாடி மலருக்கு ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் வெளியிடப்படவுள்ள 'யாழ்.பாடி- 8' மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கவிதை, சிறுகதை, நூல் விமர்சனம், சிறுவர் இலக்கியம், நாட்டாரியல், மருத்துவம், வணிகம், உளவியல், நாடக எழுத்துரு, ஆய்வு (இலக்கியம், தொல்லியல், ஆன்மிகம், வரலாறு) சூழலியல், சமூகவியல், கிராமியக் கலைகள், கலை மரபும் பண்பாடும், அறிவியல் போன்ற தலைப்புகளில் ஆக்கங்களை அனுப்பி வைக்கவும்.

பிரதேசம் சார்ந்த தொன்மைகளை அடையாளங் கண்டு பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் ஆக்கங்களாக அமையவேண்டும்.

கையெழுத்துப் பிரதியாகவோ அல்லது கணினியில் தட்டச்சுப் பதிப்பாகவோ சமர்ப்பிக்கமுடியும். கவிதை தவிர்ந்த ஏனைய ஆக்கங்கள் யாவும் ஏ-4 தாளின் இருபக்கங்களுக்கு மேற்பட்டவையாக அமைந்திருத்தல் வேண்டும். சுயபடைப்பாக அமைவதுடன் ஏற்கனவே வெளிவந்தவையாக அமைதலாகாது.

கடிதவுறையின் இடதுபக்க மூலையில் 'யாழ்.பாடி- 8 பிரதேச மலர்' எனக் குறிப்பிடவேண்டும். ஆக்கங்களுடன் முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## பால் சமத்துவத்தை ஏற்படுத்தச் சட்டம்!

கொழும்பு, ஒக். 13



ஆண், பெண் பாலினம் சார்ந்த வன்முறைகளை தடுப்பதற்கான மிக முக்கியமான 3 சட்டங்களைக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட பணிப்புரைகளுக்கமைய அரசாங்கம், சிறுவர் மற்றும் மகளிர் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் விசேட கவனத்துடன் செயற்படுகின்றது. அதற்கமைய பெண்களின் பிரச்சினைகளை அறிவிப்பதற்காக தற்போதும் 24 மணித்தியாலங்கள் இயங்கும் 1938 என்ற தொடர்பு இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல் அடையாளத்தை வெளிப்படுத்தாமல் விட்டுச் செல்லப்படும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக 'கவுலுவ' என்ற வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆண்,பெண் பாலினம் சார்ந்த வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆண், பெண் பாலின சமத்துவச் சட்டம், பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுச் சட்டம், பெண்கள் வலுவூட்டலுக்கான சட்டம் ஆகிய முக்கியமான மூன்று சட்டங்களை கொண்டுவருவதற்கான முன்னெடுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் ஒதுக்கீடுகள் ஊடாக இந்த வேலைத்திட்டம் அடுத்த ஐந்து வருடங்களில் (2024- 2028) முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்கீழ் இளம் பெண்கள், விதவைகள், சிறைச்சாலையிலிருக்கும் பெண்கள், தோட்டத் தொழில் செய்யும் பெண்கள், குறைந்த வருமானம் பெறும் நகர பிரதேசங்களைச் சேர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் ஆகியோரை வலுவூட்டும் வகையில் சுயதொழில் முறைகள் செயற்படுத்தப்படவுள்ளன - என்றார். (ம-44)

# அரசின் கொள்கைகளால் நாம் ஆட்டங்காணுவோம்

கூறுகிறது மொட்டுக்கட்சி

கொழும்பு, ஒக். 13

**மக்கள்மீது சுமைகளைத் திணிக்கும் வகையில் அமைச்சரவை தொடர்ந்தும் முடிவுகளை எடுக்குமானால் அது எமது கட்சியைப் பாதிக்கும். இதற்கு எதிர்வரும் வரவு - செலவுத் திட்ட கூட்டத்தொடரின் போது தீர்க்கமான அரசியல் முடிவொன்று எடுக்கப்படும் - இவ்வாறு சிறிலங்கா பொதுஜன பெரமுன**

கட்சி அரசாங்கத்தை எச்சரித்துள்ளது. இதுதொடர்பில் கருத்துவெளியிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன, தற்போதைய அரசின் இருப்பு எமது கைகளில்தான் உள்ளது. அதனால் அரசால் எடுக்கப்படும் முடிவுகள் எமது கட்சிக்கும் தாக்கம் செலுத்தும். நாம் கூறுவதைக் கேட்காமல் மக்கள் மீது சுமைகளைத் திணிக்கும் வகையில் அரசும் அமைச்சரவையும் முடிவுகளை எடுக்கக்கூடாது. அவ்வாறில்லையாயின் பாதீட்டுக் கூட்டத் தொடரின்போது எமது தீர்க்கமான முடிவை அரசு கண்டுகொள்ள நேரிடும். எமது கோரிக்கைக்கு செவிமடுக்காவிட்டால் நாம் எதற்காக கையை உயர்த்தவேண்டும்? - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவனக் கட்டமைப்பை வலுவாக்குவதற்கு நடவடிக்கை

## ஜகத் குமார தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.13**
**இலங்கையில் அரச நிறுவனங்களின் கட்டமைப்பை வலுப்படுத்தவும், மக்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் தொடர் வழிகாட்டுதல்களைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறவேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் ஜகத் குமார தெரிவித்தார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அனைத்து அரசஅதிகாரிகள், மக்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துகளையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின்போதும் பெரும்பாலும் மாற்றுத்திறனாளிகள் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவர்கள் தடைகளின்றி தமது வாக்குகளை அளிக்கக் கூடிய வகையில் எதிர்காலத்தில் நடைபெறும் அனைத்துத் தேர்தல்களின்போதும் மாற்றுத்திறனாளிகளுக்காக விசேட அடையாளஅட்டை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

வாக்களிக்கப் பயன்படுத்தப்படும் மையை இறக்குமதி செய்வதற்கு அதிகபணம் செலவாகின்றது.

தற்போது தேசியஅடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளதால் வாக்களிப்பில் முறைகேடுகளைச் செய்யமுடியாது. தேர்தலுக்கான செலவினங்களைக் குறைப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்படவேண்டுமெனவும் குழு பரிந்துரைத்துள்ளது.

தற்போது மாகாணசபைகளில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பதில்லை. அதனால் பொதுமக்கள் தமக்கு அவசியமான சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர். முறையற்ற விதத்தில் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படுவதாக கடந்த காலங்களில் பொதுமக்களால் பல்வேறு விமர்சனங்களும் இந்த மாகாணசபைகள் மீது சுமத்தப்பட்டன. அரச நிதி வீணடிக்கப்படுகின்றது என்றும் குற்றம்சாட்டப்பட்டது.

எதிர்காலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகளுக்கு நிதி வழங்குவதற்கு முறையான புதிய வேலைத்திட்டம் ஒன்று அவசியமாகின்றது. அது தொடர்பில் எமது குழு கலந்துரையாடிவருகின்றது.

நாட்டைக் கட்டியெழுப்ப சில தந்திரங்களைக் கையாண்டு நேர்மையுடன் செயற்பட்டால் இந்த நாட்டைக் கட்டியெழுப்பமுடியும். இதற்கு ஊடக நிறுவனங்களின் ஆதரவும் தேவை-என்றார். (எ-இ)



# நெத்தலி விலை குறைவடையும்

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 13
எதிர்வரும் வாரத்துக்குள் நெத்தலியின் விலையை 200 ரூபா முதல் 250 ரூபாவுக்குள் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கோழி இறைச்சி, முட்டை, கருவாடு மற்றும் மீனின் விலைகள் அதிகரித்திருந்தமையால், நாட்டில் போஷாக்குத் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை தற்போது ஆயிரத்து 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்படும் கோழி இறைச்சியின் விலையை டிசெம்பர் மாதமளவில் 850 ரூபாவுக்கு விற்பனை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# நிகழ்நிலை காப்புச்சட்டம் நாட்டுக்குத் தேவையற்றது

## எரான் விக்கிரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.13
சமூக வலைத்தளங்களின் ஊடாக இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு போதுமானளவு சட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன. அதனால் ஜனாதிபதியால் தன்னிச்சையாக நியமிக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவைத் தோற்றுவிக்கும் சர்வாதிகார நிகழ்நிலை காப்புச்சட்ட வரைவை உடனடியாக மீளப்பெறவேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நிகழ்நிலை காப்புச்சட்ட வரைவு சமூக வலைத்தளங்களை மாத்திரமின்றி, தற்போது இணையத்தில் இயங்கும் அச்சு ஊடகங்கள் உட்படப் பிரதான ஊடகங்களையும் முடக்குவதாகவேஅமையும். இதனூடாக நியமிக்கப்படவுள்ள ஆணைக்குழு சுயாதீனமானதாகஇருக்காது. காரணம் அதன் உறுப்பினர்கள் ஜனாதிபதியால் நேரடியாக நியமிக்கப்படுகின்றனர். இந்தச் சட்டவரைவு அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்கு நீதிமன்றம் ஒருபோதும் அனுமதிக்காது. அதனால் அரசாங்கம் மீளப்பெறவேண்டும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். அதன் அடிப்படையில் ஜனநாயகத்துக்கு முரணாக கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை இந்தச் சட்டவரைவின் ஊடாகப் பறிப்பதற்கு இடமளிக்கமுடியாது-என்றார். (எ-இ)

# 300 ஆபத்தான மரங்கள்

கொழும்பு, ஒக்.13
கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 300 அபாயகரமான மரங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த மரங்கள் மக்களுக்கும் சொத்துகளுக்கும் அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றன.

அவை தொடர்பில் ஆராய்ந்து குறித்த மரங்களை அகற்ற குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபைஎல்லைக்குள் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பெரிய மரங்கள் உள்ளன. அவற்றில் 300 மரங்கள் அபாயகரமானவையென இனங்காணப்பட்டுள்ளன. (எ-இ)

# இலங்கைக் கல்விமுறைமை சர்வதேசத்தின் மட்டத்துக்கு

## கல்விஅமைச்சர் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13
எதிர்காலத்தில் இலங்கையின் கல்வி முறைமைகள் சர்வதேச மட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் நூற்றாண்டுவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையின் கல்வி முறைமைகளை சர்வதேச மட்டத்துக்குக் கொண்டு வருவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். இலங்கையின் முன்பள்ளிக்கல்வி, பாடசாலைக் கல்வி, தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் உயர்கல்வி ஆகிய நான்கு துறைகளும் ஏனைய முன்னேறிய கல்வி முறைகளுக்கு அமைவாக பாடநெறிகள் மற்றும் வளங்களுக்கு இணையாக அபிவிருத்தி செய்யப்படும்.

எதிர்காலத்தில் ஒன்றிணைக்கப்பட்ட ஆசிரியர் கல்விக்காக அர்ப்பணிக்கப்பட்ட கல்விப் பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்படும். இதன்மூலம் யாழ். குடாநாட்டின் கேந்திர நிலையமாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமையும். வடக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரியர் பயிலுநர்களுக்கு இது சிறந்த வாய்ப்பாக அமையும். குடாநாட்டுக்குள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான பரந்த வாய்ப்புகள் உருவாக்கப்படும் - என்றார். (எ-இ)

# இலங்கைக்கு வந்தது அமெ. போர்க்கப்பல்

கொழும்பு, ஒக்.13
அமெரிக்கக் கடற்படைக் கப்பலான யு.எஸ்.என்.எஸ்.பிரன்சுவிக் கொழும்புத்துறைமுகத்துக்கு வந்துள்ளது. இந்தக் கப்பல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை கொழும்பில் தங்கியிருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

103 மீற்றர் நீளமுள்ள இந்தக் கப்பலில் 24 பணியாளர்கள் உள்ளனர். இந்தக் கப்பலுக்கு கப்டன் ஆண்ட்ரூ எச் பெரெட்டி தலைமை தாங்குகிறார். கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் பணியாளர்கள் நாட்டிலுள்ள சில சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மாறப்போகும் அதிகாரச் சமன்பாடுகள்

அதிகாரத்தின் நகர்வுகள் எப்போதுமே விசித்திரமானவை. ஆனால், அவையெல்லாமே அதன் இருப்பை எப்படியேனும் தக்கவைப்பதற்கான தந்திரத் தனம்கொண்டவை. தன் இலாபத்துக்காக எதையும் செய்யும் துணிச்சல் அதிகாரப்பசி கொண்டவர்களிடம் எப்போதும் இருக்கும். எவற்றையெல்லாம் ஒருகாலத்தில் அதிகாரத்தரப்பு வெறுத்து ஒதுக்கியதோ அவற்றையெல்லாம் பின்னொருநாளில் அரவணைக்கும். அதேபோன்று முன்னர் தனக்குப் பிடித்தமான எல்லாவற்றையும் பின்னாளில் போட்டு மிதிக்கவும் அதிகாரம் தயங்காது. அப்படிப்பட்டதொரு நிலை, இலங்கையின் நிறை வேற்றதிகாரத்துக்கு இப்போது வந்திருக்கின்றது.


'ஐ.தே.க. வின் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சர்வாதிகார வேட்கையால் பிறப்பெடுத்ததுதான் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை.' ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றெல்லாவற்றையும் செய்யும் சக்தி கொண்டது இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை' என்று சொல்லப்படுமளவுக்கு அத்தனை அதிகாரங்களும் ஒற்றைப் பதவியின் கீழ் குவிக்கப்பட்டன. மிதமிஞ்சிய அதிகாரம் கொண்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஜனநாயகத்தை நேசிப்போர் விரும்பவில்லை. மக்களும் மெல்ல மெல்ல நிறைவேற்றதிகாரத்துக்கு எதிரான மனோநிலைக்கு வந்தனர். இதனை உணர்ந்துகொண்ட அரசியல்வாதிகள் 'நாம் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்று அதிகாரமுறைமையை ஒழிப்போம்' என்று வாக்குறுதி வழங்கினர், ஆட்சிக்கும் வந்தனர். ஆனால் சந்திரிகா, மஹிந்த, மைத்திரி என்று எல்லோருமே எந்த நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாகக் கூறினரோ, அந்த அதிகாரச் சுவையை ருசித்தனரே தவிர ஒழிப்பதற்கான இம்மியளவு நடவடிக்கையையும் முன்னெடுக்கவில்லை.

இந்தநிலையில், அதிர்ஷ்டவசத்தால், நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக மாறிய ரணில் விக்கிரமசிங்கவும், அந்தப் பதவியின் அதிகாரக் கிறக்கத்தில் மூழ்கினார். எப்படியும் அடுத்ததாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, அதன் மூலம் இன்னும் 5 வருடங்களுக்கு தன் ஜனாதிபதிக் கதிரையைப் பலமாக்கிவிடவேண்டும் என்று பல கணக்குகள் போட்டார். ஆனால், அவரது கணக்கும் உளவுத்தகவல்களும் எதிரெதிராக அமைந்தன. என்னதான் ரணில், ஓரளவுக்கு இலங்கையின் பொருளாதாரநிலை அடியோடு சரியாமல் காப்பாற்றினாலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவர் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெறமாட்டார் என்பதே உளவுத்தகவல்களின் முடிவாக இருந்தன. ஆனால், ரணில் மனம் தளரவில்லை. எனவேதான் தனக்கு அடுத்தமுறை எட்டாக்கனியாக மாறப்போகும் நிறைவேற்றதிகார முறைமையை ஒழித்துக்கட்டிவிட்டு, அதற்குப் பதிலாக நிறைவேற்றதிகார பிரதமர் ஆட்சியைக் கொண்டுவர திரைமறைவில் தீவிரம் காட்டி வருகின்றார் எனச் சொல்லப்படுகின்றது. இது தென்னிலங்கை அரசியலில் பெரும் பரபரப்பையும் கிளப்பியிருப்பதோடு, அரசியல் கட்சிகளின் இதுநாள் வரையான நிலைப்பாடுகளிலும் தலைகீழ் விகித சமன்பாடுகளை நிறுவமுனைந்திருக்கிறது. நிறைவேற்றதிகார முறையை எந்த ஐ.தே.க. அறிமுகப்படுத்தியதோ அதேகட்சியின் ரணில், தான் இப்போது அந்த முறைமையை ஒழிக்க நினைக்கிறார். நிறைவேற்றதிகாரத்தை ஒழிக்கவேண்டுமென கூப்பாடு போட்ட ஜே.வி.பி . உள்ளிட்ட கட்சிகளோ 'இப்போது ஒழிக்க வேண்டாம். அதெல்லாம் பிறகு பார்த்துக்கொள்ளலாம்' என்று அந்த முறைமையை ஒழிக்க எதிர்ப்புக்கொடி காட்டுகிறது.

ரணிலின் அரசியல் குயுக்திகள் எவராலும் கணிக்கப்பட முடியாதவை. அவருக்குத் தேவை அதியுச்ச அதிகாரக் கதிரை மட்டுமே. அந்தக் கதிரைக்கு 'நிறைவேற்றதிகார ஜனாதிபதி', 'நிறைவேற்றதிகார பிரதமர்' என என்ன பெயர் இருந்தாலும் அவருக்குக் கவலையில்லை. நிறைவேற்றதிகாரத்தை ஒழிப்பதன் மூலம் தன்னை ஜனநாயகத்தின் காவலனாக சர்வதேச அரங்கில் தன் விம்பத்தைக் கட்டமைத்துக் கொள்ளலாம். அதேவேளை அந்தப் பதவிக்குச் சற்றும் குறைவில்லாத அதிகாரத்தோடு ஆட்சியைப் பிடிக்கலாம். இதுதான் ரணிலின் இப்போதைய கணக்காகத் தெரிகின்றது. ஆனால், மக்கள் என்ன கணக்குப் போட்டிருக்கிறார்கள் என்பது ரணிலுக்குத் தெரியாதே.

### நாளொரு நல்வார்த்தை

நீ சுத்தமான வீரன் என்றால்
உனக்கான ஆயுதத்தை
போர்க்களத்திலேயே உன்னால்
உருவாக்கிக் கொள்ளமுடியும்.
–சேகுவேரா–



# கடன் சீரமைப்புக்கு முழு ஒத்துழைப்பு!

## இலங்கைக்கு ஐ.எம்.எப். உறுதி

**கொழும்பு, ஒக்.13**

**பொருளாதார மீட்சி மற்றும் கடன் மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று சர்வதேச நாணயநிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் உறுதியளித்துள்ளார்.**

சர்வதேச நாணயநிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத்துக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையே நடந்த சந்திப்பிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

பொருளாதார மீட்சிக்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை வரவேற்றுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் முதல் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கீதா கோபிநாத் கடன் மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாணயநிதியம் முழுமையான ஒத்துழைப்பு வழங்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிர்வாக முறைமை அடையாளப்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியத்தின் திறைசேரி பிரதி உதவிச் செயலாளர் ரொபட் கப்ரொதுக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்குமிடையிலான சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பொருளாதார மீட்சிக்காகவும், இலங்கையில் நல்லாட்சியை ஸ்தாபிப்பதற்கும் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. பொருளாதார மீட்சிக்கும், கடன் மறுசீரமைப்புக்கும் ஐக்கிய அமெரிக்க இராச்சியம் இலங்கைக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என திறைசேரியின் உதவி செயலாளர் ரொபட் கப்ரொத் உறுதியளித்துள்ளார். (எ-இ)

# படையெடுக்கும் சுற்றுலாவிகள்

கொழும்பு. ஒக்.13

இலங்கைக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 938 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இந்த ஆண்டு இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தைக் கடந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

| நாளை | 14.10.2023 சனிக்கிழமை புரட்டாதி 27 | சுபநேரம் : 03.02 – 04.32 ராகுகாலம் : 09.02 – 10.32 |
| --- | --- | --- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆடுகளத்துக்கு அப்பால்...!!

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் தொடக்க விழாவை எவ்வித முக்கியத்துவம் இல்லாமல் கைகழுவிவிட்டு, இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டத்துக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவமும் கொண்டாட்டமும் கடும் விமர்சனத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது.

உலகக் கிண்ண முதல் ஆட்டத்தில் எப்போதும் கடந்த தொடரில் வெற்றி பெற்ற அணியும், இரண்டாம் இடம் பெற்றுக்கொண்ட அணியுமே மோதுவது வழக்கம். இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள்தான் அகமதாபாத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் மோதின. ஆனால், தொடக்க விழாவோ ஆரவாரமின்றி அமைதியாக முடித்துக் கொள்ளப்பட்டது. வழக்கமாக கிரிக்கெட் போட்டியின் தொடக்க ஆட்டத்தில்தான் எல்லாவித கோலாகலங்களும் கொண்டாட்டங்களும் நடைபெறும். இதுவே மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால், இந்த முறை தொடக்க விழா ஆட்டத்தின்போது பெரிதாக எவ்வித விழாவும் இல்லை.

ஆனால் இந்தியா பாகிஸ்தான் அணிகள் நாளை மோதுகின்றன. இந்த ஆட்டத்துக்கு முன்னெப்போதுமில்லாத அளவுக்கு நடிகர்கள் அமிதாப் பச்சன், ரஜினிகாந்த், வருண் தவான் உள்ளிட்ட பிரபலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. ஆட்டத்துக்கு முன்பாக இசை நிகழ்ச்சி மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) ஏற்பாடு செய்துள்ளது. எந்த சர்வதேச போட்டிகளிலும் இதுவரை காணாத வகையில் தொடரின் மத்தியில் மிக பிரமாண்ட நிகழ்ச்சியை நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளது.

உலகக் கிண்ண அட்டவணை வெளியானது முதல் இந்தியா பாகிஸ்தான் இடையேயான ஆட்டத்துக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இரு அணிகளுக்கு இடையேயான ஆட்டம் ஒக்ரோபர் 15ஆம் திகதி என்று முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால், அகமதாபாத்தில் குறிப்பிட்ட நாளில் நவராத்திரி விழா நடைபெறுவதால் ஒருநாள் முன்னதாக ஆட்டம் மாற்றப்பட்டு மறு அட்டவணை வெளியிடப்பட்டது.

உலகின் பணக்கார கிரிக்கெட் சபையான பி.சி.சி.ஐ.யின் முடிவை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் பிற நாடுகளும் தங்களின் ஆட்டங்களை மாற்றி அமைக்க ஒப்புக்கொண்டன. உண்மையிலேயே பாதுகாப்பு காரணமாக இருந்தால், வேறு மைதானத்துக்கு ஆட்டத்தை மாற்றி இருக்கலாம். ஆனால், 1.32 லட்சம் பேர் அமரும் மோடி மைதானத்தைவிட்டு ஆட்டம் மாற்றப்பட்டால் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது என்ற காரணத்தால் மொத்த அட்டவணையும் மாற்றப்பட்டது.

இந்த நிலையில், இந்தியா பாகிஸ்தான் இடையேயான உலகக் கிண்ண ஆட்டத்தை விளம்பரமாக்கி வர்த்தகமாக மாற்றுவதாக பி.சி.சி.ஐ. செயலரும், இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் மகன் ஜெய் ஷாவை இணையத்தில் பல்வேறு தரப்பினர் சாடி வருகின்றனர்.

கடந்த 2019 உலகக் கிண்ணத் தொடரின்போது இந்தியா பாகிஸ்தான் விளையாடிய ஆட்டத்தின் தொலைக்காட்சி ஒளிபரப்பை மட்டும் 27.3 கோடி பார்வையாளர்கள் கண்டுள்ளனர். இரு நாடுகள் விளையாடும் ஆட்டங்களை வைத்துப் பல நூறு கோடி ரூபா லாபத்தை ஈட்ட கிரிக்கெட் சபையும், பன்னாட்டு நிறுவனங்களும் காத்திருக்கின்றன.

இரு பலம் வாய்ந்த அணிகள் மோதும் ஆட்டங்களைக் காட்டிலும், இந்தியா பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டங்களுக்கு அதிகப் பரபரப்பு ஏற்படுத்துவது ஏன்? இது வரவேற்கத்தக்கது அல்ல. எங்கேனும் ஓரிடத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்றால்... அதனை ஊக்குவிக்கும் முயற்சிகளையே ஒவ்வொரு போட்டி அமைப்பாளர்களும் செய்துவருகிறார்கள். விளையாட்டை விளையாட்டாகவே விட்டுவிட்டால்... இருநாட்டு ரசிகர்களும் தப்பிப்பார்கள். வெறுப்பு அரசியலைக் காசாக்குவதில் விளையாட்டைக்கூட மிச்சம் வைக்க மாட்டார்கள் போல! (ஓ-5)

### உலகக் கிண்ண வரலாற்றில்

# அவுஸ்திரேலியாவுக்கு அடுத்தடுத்து தோல்விகள்

## புள்ளிப்பட்டியலில் கடைசிக்கு முதலிடம்



**5 தடவைகள் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்ட அவுஸ்திரேலிய அணி நேற்றைய தினம் தென்னாபிரிக்க அணியுடனான ஆட்டத்தில் மிக மோசமாக தோல்வியடைந்து புள்ளிப்பட்டியலில் 9 ஆவது இடத்தை அதாவது கடைசிக்கு முதலிடத்தில் உள்ளது.**

லக்னௌவில் இடம்பெற்ற நேற்றைய ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அந்த அணி 7 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணியின் சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டிகொக் 109 ஓட்டங்களையும், மார்கரம் 56 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். தென்னாபிரிக்க அணி ஒரு கட்டத்தில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து சீராக ஓட்டங்களைக் குவித்து வந்தது. 350 ஓட்டங்களைத் தாண்டும் என்ற நிலைமை இருந்தாலும், அவுஸ்திரேலிய அணி டிகொக் மார்கரம் ஆகியோரை ஆட்டமிழக்கச் செய்து தென்னாபிரிக்க அணியை 311 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தியது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் ஸ்டார்க் மற்றும் மக்ஸ்வெல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், குமின்ஸ், ஸாம்பா, ஹெசில்வூட் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

312 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்திலேயே தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் திணறியது. 17 பந்துப் பரிமாற்றங்களில் 70 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து ஆட்டத்தை தென்னாபிரிக்காவிடம் பறிகொடுத்திருந்தது. அதன் பின்னர் லபுஷேன் மற்றும் ஸ்டார்க் இணைந்து மெதுவாக மீட்டெடுத்து கௌரவமான தோல்வியை நோக்கிப் பயணித்தனர். 69 ஓட்டங்களை இந்த இணை பகிர்ந்திருந்த நிலையில் ஜேன்சனின் பந்து வீச்சில் ஸ்டார்க் ஆட்டமிழக்க பின்னர் சிறிது நேரத்தில் ஏனைய வீரர்களும் ஓய்வு அறைக்குத் திரும்ப 40.5 பந்துப் பரிமாற்றங்களில் 177 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து அவுஸ்திரேலிய அணியின் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

ஆட்டநாயகனான டிகொக் தெரிவானார். (ஓ-5)




## ஆட்டத்தைவிட அம்மா முக்கியம்

### பும்ரா உருக்கம்

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தைவிட தனது தாயை பார்க்க ஆவலாக இருப்பதாக தெரிவித்துள்ளார் இந்திய அணியின் வேகப் பந்து வீச்சர் பும்ரா.

பும்ராவின் சொந்த ஊர் அகமதாபாத். பாகிஸ்தான் அணியுடன் இந்திய அணி நாளை இங்கு மோதவுள்ளது. 'அகமதாபாத்தில் முதலில் எனது தாயை பார்க்க செல்வேன். தாயை பார்ப்பதே எனக்கு முதல் வேலை. நீண்ட நாள்களாகவே வீட்டிலிருந்து வெளியே இருக்கிறேன். எனவே எனது அம்மாவை வீட்டில் பார்க்க இருப்பதை நினைத்து மகிழ்ச்சியாக உள்ளது' என பும்ரா குறிப்பிட்டார்.

சொந்த ஊர் மைதானத்தில் விளையாட இருப்பது தொடர்பாக பும்ரா குறிப்பிடுகையில், அகமதாபாத் மைதானத்தில் இதுவரை நான் ஒருநாள் ஆட்டங்களில் விளையாடியதில்லை. டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே விளையாடி இருக்கிறேன். எனினும் சொந்த ஊர் மைதானம். சூழல் வேறு உற்சாகமாக இருக்கும். நிறையப் பேர் வருவார்கள் என்று நான் நம்புகிறேன். எல்லாம் சிறப்பானதாக அமையும் என நம்புகிறேன்' எனத் தெரிவித்துள்ளார். (ஓ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தினம் ஒரு பரிசு — நாள் 7 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| த.ஹரிகரன் | - அல்வாய் | சி.அக்ஷிகா | - யாழ்ப்பாணம் |
| தி.நிவிஷிகா | - சுண்டுக்குளி | சி.மதுசன் | - மல்லாவி |
| ச.அரவிந்தக்ஷன் | - உடுவில் | ஏ.மிதுனா | - நானாட்டான் |
| ச.வசந்தகுமார் | - வவுனியா | வி.அபினாஷ் | - குருநகர் |
| த.ரஷீனா | - மீசாலை | வி.வித்தகன் | - பண்டத்தரிப்பு |
| கே.தனுஜா | - வவுனியா | ஜி.பேரின்பன் | - கள்ளிக்குளம் |
| உ.கேசவர்மன் | - அல்வாய் கிழக்கு | கே.ஜிபோஜிபன் | - வவுனியா |
| சி.கௌரிசங்கர் | - திருநெல்வேலி | | |



# டிகொக் தொடர் சதம்

தென்னாப்பிரிக்கா வீரர் டி கொக் தனது அடுத்தடுத்த தொடர் சதங்களால் புதிய சாதனைகளைப் படைத்துள்ளார். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் குயிண்டன் டி கொக் 106 பந்துகளில் 109 ஓட்டங்களைக் குவித்தார். இலங்கைக்கு எதிரான முதல் ஆட்டத்தில் சதம்விளா அவர் தொடர்ச்சியாக தனது இரண்டாவது சதத்தை நேற்றுப் பதிவு செய்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதமடித்த மூன்றாவது தென்னாப்பிரிக்க வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். தொடக்க வீரராக களமிறங்கி அதிக சதங்கள் அடித்த தென்னாப்பிரிக்க வீரர்களில் கிப்ஸ் 18 சதங்கள் என்றிருந்த சாதனையை நேற்று முறியடித்து இரண்டாம் இடத்துக்கு முன்னேறினார். முதலிடத்தில் 27 சதங்களுடன் ஹசிம் அம்லா உள்ளார். (ஒ-5)



# வில்லியம்ஸன் இன்று களமிறங்க வாய்ப்பு?

நியூஸிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் அந்த அணி இந்த உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய முதல் இரண்டு ஆட்டங்களிலும் களம் இறங்கவில்லை. இந்த நிலையில் பங்களாதேஷ; அணிக்கு எதிரான இன்றைய ஆட்டத்தில் வில்லியம்ஸன் களமிறங்கக் கூடும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-5)



## இன்றைய ஆட்டம்

# ஓர் அலசல்

உலகக்கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டத்தில் நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன. சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

நியூஸிலாந்து அணி பங்களாதேஸை விடவும் ஒப்பீட்டளவில் பலமாக உள்ள போதிலும், இன்றைய ஆட்டத்தில் நியூஸிலாந்து முற்றாக ஆதிக்கம் செலுத்தும் என்றெல்லாம் கணித்துவிட முடியாது. காரணம் சென்னையின் ஆடுகளங்கள் மர்மமானவை. அற்புதங்களை எப்போதும் நிகழ்த்துபவை.

உலகக்கிண்ணத்துக்கான சேப்பாக்க ஆடுகளம் சுழலுக்குச் சாதமாக வடிவமைக்கப்பட்டுள்ளமை அவுஸ்திரேலியா மற்றும் இந்திய அணிகள் மோதிய ஆட்டத்திலிருந்து அப்பட்டமாகத் தெரிந்தது. ஆதலால், இன்றும் சேப்பாக்கத்தில் சுழற்பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள். பங்களாதேஷ் அணியின் தலைவர் சகிப் அல் ஹசன் தலைசிறந்த சுழற்பந்துவீச்சாளர்களில் ஒருவராக உள்ளார். மிராஷும் கட்டுக்கோப்பாக வீசுகின்றார். இவர்கள் இருவரின் 20 பந்துப்பரிமாற்றங்களும் நியூஸிலாந்துக்கு துர்க்கனவுகளே.

நியூஸிலாந்து அணியில் சான்நெர் இருக்கின்றார். சென்னை சுப்பர் கிங்ஸில் விளையாடி சென்னை - சேப்பாக்கம் ஆடுகளத்தை மனப்பாடமாக வைத்திருக்கின்றார் அவர். அவர்தான் இன்று நியூஸிலாந்தின் 'ட்ரம்ப் காட்'. மற்றும் படி துடுப்பாட்டத்தைப் பொறுத்தமட்டில் பங்களாதேஷ் அணியை விடவும் நியூஸிலாந்து அணி பலமாகவே இருக்கின்றது. பங்களாதேஷின் வேகப்பந்துவீச்சாளர்களை, நியூசிலாந்தின் கொன்வே, ரச்சின் ரவீந்திரா, லாதம், நிக்கொல்ஸ் என்ற அசுர பலமான துடுப்பாட்ட வரிசை கையாள்வதில் கரைச்சல்கள் இருக்காது. இங்குதான் பங்களாதேஷ் வீழும். (ஒ-5)

# உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 8**

**பங்களாதேஷ்- நியூஸாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (13.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

## இன்றைய ஆட்டம்

நியூஸிலாந்து — பங்களாதேஷ்

NEW ZEALAND CRICKET

இடம் : சென்னை
நேரம் : பி.ப. 2.00

বাংলাদেশ
Bangladesh Cricket Board

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்களுக்குத்...

பிரிட்டன் அமைச்சர் அன் மேரி பெலிண்டா ரவேலியன் யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் பயணமாக நேற்று வருகை தந்திருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், த.சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோரை யாழ். நகரிலுள்ள விடுதியில் நேற்று இரவு சந்தித்தார்.

**விக்னேஸ்வரன் கருத்து**

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன், 'வடக்கின் பொருளாதாரத் தேவைப்பாடு தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினோம். வடக்கு - கிழக்கு மக்களின் தேவைகள் தொடர்பில் போதுமான அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை. அரசாங்கத்தின் முகம் தற்போது வித்தியாசமாக இருப்பதையும் சுட்டிக்காட்டினோம். எதிர்காலத்தில் அது மாற்றமடையலாம் என்றும், இதன் போது தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதையும் பிரிட்டன் அமைச்சர் எங்களிடம் குறிப்பிட்டார்' - என்றார்.

**சித்தார்த்தன் கருத்து**

இந்தச் சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்த.சித்தார்த்தன் குறிப்பிடுகையில், 'ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அடுத்த ஆண்டு தீர்மானம் கொண்டு வரப்படும் என்று சொன்னார். அந்தத் தீர்மானங்கள் ஊடாக பலன் இருக்கின்றதா என்று எங்களிடம் கேட்டார் . அதன் ஊடாகப் பிரயோசனம் இல்லை. ஆனால், தமிழ் மக்கள் விடயத்தை பேசு பொருளாக வைத்திருக்கின்றமையை சுட்டிக்காட்டினோம். நீதிபதியின் வெளியேற்றம், இராணுவ ஆக்கிரமிப்புகள் தொடர்பிலும் பேசினோம்' - என்றார்.

(அ-ஓ-125)

## யானை...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஒட்டுசுட்டான், கருவேலன் கண்டல் கிராம அலுவலர் பிரிவில் மானுருவி கிராமத்தில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. அதேயிடத்தைச் சேர்ந்த குமாரசாமி அரசகுமார் (வயது - 55) என்பவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். இவர் இரவு வேளை வீதியால் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது யானை தாக்கியுள்ளது. இதன்போது காயமடைந்தவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ஓ-19)



# மணமகள் தேவை

01. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons),Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (K). 1996. மிருகசீரிடம். B Eng, Software Engineer, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. பளை. இந்து. கௌரவகுலம் (K). 1988. அனுசம். Inventory officer, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
04. தெல்லிப்பளை. இந்து. குருகுலம். 1996. சித்திரை. Post graduate in Management, Newzealand Governement officer, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை.
05. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
06. யாழ். இந்து. குருகுலம. 1983. பரணி. Sales Assistant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
07. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1988. பூரட்டாதி. MBA, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. யாழ். இந்து. கௌரவகுலம் (V). 1980. உத்திரட்டாதி. IT Degree, Accountant மணமகனுக்கு மணமகள் தேவை.
09. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1989. அனுசம். Graduate, Human Resource Analyst, USA மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728



# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பஞ்சவர்ணம்பிள்ளை கிருஷ்ணமூர்த்தி**

(தேவி அச்சகம் ஸ்தாபகர், மூர்த்தி விளம்பர சேவை)

**மலர்வு** 15.03.1936 **உதிர்வு** 26.09.2011

திதி: சதுர்த்தசி (13.10.2023)

அன்பு அப்பா!
எங்கள் குடும்ப ஒளியே அப்பா!
கண்மூடித்திறக்க முன் 12 ஆண்டுகள்
- கடந்துவிட்டது
எங்கள் நெஞ்சறைக்கூட்டில் அழியா ஓவியம்
நீங்கள் அப்பா!
உறவுகளைத் தவிக்கவிட்டு இமைகளை
- மூடிவிட்டீர்கள்
மறவோம் உங்கள் அன்புதனை உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல மாரியம்மனை
வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

குடும்பத்தினர்.
114/19, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

(cs 26542) (N.1)



# மரண அறிவித்தல்



தோற்றம் 31 • 03 • 1952

மறைவு 12 • 10 • 2023

## திருமதி சின்னத்துரை யோகலட்சுமி

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நந்தாவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இராசரத்தினம் அன்னம்மா தம்பதிகளின் புதல்வியும். காலஞ்சென்றவர்களான ஐயாக்குட்டி சின்னம்மா தம்பதிகளின் மருமகளும்.காலஞ்சென்ற சின்னத்துரையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வர்களான பாலசுப்பிரமணியம். பாலசிங்கம் மற்றும் யோகநாதன் (சின்ரா - ஜேர்மனி). யோகராணி ஆகியோரின் சகோதரியும். இராசலட்சுமி. இராசமணி. கண்ணுத்துரை ஆகியோரின் மச்சாளும். செல்வராணி (றஞ்சி). ஸ்ரீவிக்கினேஸ்வரன் (ராசன் - லண்டன்). இந்திராணி (சுமதி). ஸ்ரீபாஸ்கரன் (கண்ணன் புக்சொப்). ஸ்ரீகாந்தன் (காந்தன்) ஆகியோரின் அன்பு தாயாரும். கிருஷ்ணகுமார் (குமார்). பவாநிதி (கீதா - லண்டன்). ஜெயக்குமார் (கண்ணன்). ரோகினி (றோசி). சுதாஜினி (சுதா) ஆகியோரின் மாமியாரும். சோபன். நவீனா - ஆதீஷன் (பிரான்ஸ்). கீர்த்தனா தனுஷி (லண்டன்). லபிஷா (லண்டன்). நிகில் (லண்டன்) மதுஷன். தர்ஷிகன். தன்ஷிகா. ஸ்ரீஸ்ரிகா. சல்மியன். லக்ஷன். கஜனி. கர்ஷன் ஆகியோரின் பேர்த்தியும். அபிரா. தனன்யா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2023) வெள்ளிக்கிழமை நந்தவில் உள்ள அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
கோண்டாவில் மேற்கு

தொடர்புகளுக்கு:
077 223 8475
077 602 7505
077 378 4056

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 52473 (AK.1)


# விலைக்கேள்விக்கான கோரல் (கட்டம் III)
# வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

01. வலி தெற்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
03. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாணத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
04. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
05. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர்கள் கீழே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
06. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் (தொலைபேசி இல: 021-2240017, தொலைநகல் 021-2240327) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2023.10.13 – 2023.10.27 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரையில் சமர்ப்பித்து ரூ. 3500.00** மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. விலைக்கேள்விகள் (மூலம், பிரதி) 2023.10.30ம் திகதி 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தவிசாளர், உள்ளூர் அதிகார சபைப் பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள், அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
08. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் மு.ப 10.30 மணிக்கு 2023.10.20 அன்று நடைபெறும்
09. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம். |
| 01. | NP/14/41(15) /02/05/CF/2023/43 | Repairs of Sankuvely Hindu Cemetery, Renovation of Poovodai Hindu Cemetery burning shed and Construction of Poovodai Hindu Cemetery Boundary Wall | 2.116 | 87 | C7 or C8 or C9 | 63 | 01.01.2024 | 22,000.00 | Till 29.01.2024 |
| 02. | NP/14/41(15) /02/05/CF/2023/44 | Improvement of Punnalaikadduvan Play Ground | 1.676 | 60 | C8 or C9 | 49 | 18.12.2023 | 17,000.00 | Till 15.01.2024 |
| 03. | NP/14/41(15) /02/05/CF/2023/45 | Construction of Rest hall at Evinai Cemetery and Construction of Rest hall at Usathiyodai Christian Cemetery | 2.134 | 87 | C7 or C8 or C9 | 63 | 01.01.2024 | 22,000.00 | Till 29.01.2024 |

**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்."**

**தவிசாளர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**
**13.10.2023**

(cr.40760) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்பயிற்சிக்கு

# வடக்குக்கு வந்த பொருள்களை தென்னிலங்கைக்கு மாற்ற முயற்சி

மன்னார், ஒக். 13

மன்னார், மாந்தை மேற்கு பிரதேச பிரிவில் அமைந்துள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மன்னார் அலுவலகத்திலிருந்து அழகு சாதனம் மற்றும் சிகை அலங்காரப் பொருள்களை அம்பாந்தோட்டைக்குக்கொண்டு செல்வதற்கு ஆயத்தமாகிய நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கான தொழிற்பயிற்சி நிலையத்துக்கு இளையோர்களின் தொழிற்பயிற்சிக்கு எனப் பல இலட்சம் ரூபா பெறுமதியான அழகு சாதனம் மற்றும் சிகையலங்காரப் பொருள்கள் வழங்கப்பட்டன. இவற்றை அம்பாந்தோட்டைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் நடைபெற்று பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வாகனமும் நேற்றைய் தினம் அங்கு வந்துள்ளது.

அந்தப் பகுதி இளையோர் மூலமாக சம்பவத்தைக் கேள்விப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நேரடியாக தொழிற்பயிற்சி நிலையத்துக்குச் சென்று பார்வையிட்டு வடக்கு மாகாண ஆளுநரை தொடர்பு கொண்டுபேசியதன் அடிப்படையில், குறித்த பொருள்களை அம்பாந்தோட்டைக்கு கொண்டுசெல்லப்பட இருந்த முயற்சி கைவிடப்பட்டது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் இதைத் தெரியப்படுத்தி தொழிற்பயிற்சியை மன்னார் மாவட்டத்தில் மீண்டும் ஆரம்பித்து வைப்பதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

(அ-ஒ-213)

இஸ்ரேலிலுள்ள

# இலங்கையர்களின் பாதுகாப்பு; அரசாங்கம் கவனம் செலுத்தும்



கொழும்பு, ஒக். 13

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையில் நிலவும் கடுமையான மோதல்களைக் கருத்தில் கொண்டு இஸ்ரேலில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அவசர தேவைகள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி, இஸ்ரேலில் வாழும் இலங்கை மக்களின் தேவைகள் தொடர்பில் அதிகபட்ச தலையீட்டை வழங்குவதற்காக இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் மற்றும் இலங்கை அரசின் பொறுப்பு வாய்ந்த திணைக்களங்கள் இணைந்து விசேட வேலைத் திட்டமொன்றை நடைமுறைப் படுத்தியுள்ளன.

இஸ்ரேலில் பணிபுரியும் அல்லது வேறு காரணங்களுக்காகத் தங்கியிருக்கும் இலங்கையர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பின் அல்லது அது தொடர்பான வேறு ஏதேனும் சிரமங்கள் இருப்பின், இலங்கை அதிகாரிகளுக்கு நேரடியாக அறிவிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, தொலைபேசி எண் 0094 117966396, வட்ஸ்அப் எண் 0094 767463391 மூலம் தேவையான தகவல்களை அறிய முடியும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிவரவு, குடியகல்வு நடைமுறைகள் மற்றும் வேறு எந்த முறையின் கீழும் இஸ்ரேலில் தங்கியுள்ள எந்தவொரு இலங்கையரும் இந்தச் சேவையைப் பெறமுடியும் என அரசு அறிவித்துள்ளது.

(அ-ஒ-44)

## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ.து) - கிளிநொச்சி
## பதிவு இலக்கமும் பதிவுத் திகதியும் - PA / 46 of 08.02.1971
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் 2023.10.15 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளது.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமூகமளிக்க தகைமையுள்ள சகல உறுப்பினர்களுக்குமான கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளிக்க தகமையுடைய அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமூகமளித்து கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

### கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

கிளைபொதுச்சபைக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும்,காலமும் 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணி

| தொ .இல | கிளை இலக்கம் | கிளை | தவிசாளர் பெயர் | கிளைக்குழுதெரிவு நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கணேசபுரம் | திரு.சோமசேகரம் கிருஸ்ணகுமார் | பொதுநோக்கு மண்டபம், கணேசபுரம். |
| 2 | 2 | கனகபுரம் | திரு.பெருமாள் பவளராஜ் | கிளி.கனகபுரம் மகாவித்தியாலயம். |
| 3 | 3 | திருநகர் | திரு.மன்மதராசா லெட்டினன் | பொதுநோக்கு மண்டபம், திருநகர் வடக்கு. |
| 4 | 4 | ஜெயந்திநகர் | திரு.குணரத்தினம் ஹயந்தன் | பொதுநோக்கு மண்டபம், ஜெயந்திநகர். |
| 5 | 5 | கிளிநொச்சி மேற்கு | திரு.பாஸ்கரன் ரூபராஜ் | பொதுநோக்கு மண்டபம், பெரியபரந்தன். |
| 6 | 6 | உருத்திரபுரம் மேற்கு | திரு.பத்மநாதன் சஞ்ஜீவன் | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் மேற்கு. |
| 7 | 7 | உருத்திரபுரம் கிழக்கு | திரு.கணேஸ் சுரேஸ்பாபா | பொதுநோக்கு மண்டபம், உருத்திரபுரம் கிழக்கு. |
| 8 | 8 | சிவநகர் | திருமதி.டுஸ்மோகன் குகனிகா | கிளி.சிவநகர் அ.த.க பாடசாலை. |
| 9 | 9 | புதுமுறிப்பு | திரு.நாகமுத்து ஜெயவதனன் | பொதுநோக்கு மண்டபம், புதுமுறிப்பு. |
| 10 | 10 | கிளிநொச்சி கிழக்கு | திருமதி.பிரபாகரன் கவிதா லோறன்சியா | டொன் பொஸ்கோ பாடசாலை, கிளிநொச்சி கிழக்கு. |
| 11 | 11 | இரணைமடு கிழக்கு | திரு.அரசரத்தினம் பிரமிளன் | பொதுநோக்கு மண்டபம், மருதநகர் மேற்கு. |
| 12 | 12 | கனகாம்பிகைக்குளம் | திரு.இலட்சுமன்னன் சுதன் | கனகாம்பிகைக்குளம் அ.த.க. பாடசாலை. |
| 13 | 13 | திருவையாறு | திரு.விமலேந்திரன் முகுந்தன் | பொதுநோக்கு மண்டபம், திருவையாறு மேற்கு. |
| 14 | 14 | இரத்தினபுரம் | திரு.நடராசா நாவேந்தன் | பொதுநோக்கு மண்டபம், இரத்தினபுரம். |
| 15 | 15 | ஆனந்தபுரம் | திரு.அந்தோனிப்பிள்ளை ஜேம்சன் | பொதுநோக்கு மண்டபம், ஆனந்தபுரம் கிழக்கு. |
| 16 | 16 | பாரதிபுரம் | திரு.கந்தசாமி சசிகரன் | கிளி.பாரதிபுரம் மகாவித்தியாலயம். |
| 17 | 17 | உதயநகர் | திரு.செல்வராசா ஜெயராசா | பொதுநோக்கு மண்டபம், உதயநகர் மேற்கு. |
| 18 | 18 | அம்பாள்குளம் | திரு.வல்லிபுரம் நிதர்சன் | பொதுநோக்கு மண்டபம், அம்பாள்குளம். |
| 19 | 19 | செல்வாநகர் | திரு.பற்றிக் துரைராஜா றோய் டனிஸ்ரன் | கிளி.செல்வாநகர் அ.த.க பாடசாலை. |

**குறிப்பு :** சங்கத்தின் 19 மூலக்கிளை பொதுச்சபை கூட்டத்திற்கும் உரிய அறிவித்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளபோதிலும் தவிர்க்கமுடியாத காரணத்தினால் கிளை இலக்கங்கள் 04,05,06,09,10,11,13,15 ஆகிய கிளைப்பொதுச்சபை கூட்டங்கள் நடாத்துவதற்கான இடங்கள் மேற் குறிப்பிட்டபடி மாற்றப்பட்டுள்ளன. குறித்த எட்டு கிளைகளுக்கான கிளைப்பொதுச்சபை கூட்ட இடமாற்றம் தொடர்பான கடிதங்கள் உரிய கிளை அங்கத்தவர்களிற்கு தனித்தனியே விநியோகிக்கப்பட்டுள்ளன.

**செயலாளர்,**
**கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்(வ.து)**
**கிளிநொச்சி.**

**திகதி:- 11.10.2023**

(cr. 40756 ) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி (CF) 2023

01. யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்ப தோடு. பொதுநிதி சுற்றறிக்கை இல. 04/2016(i) மற்றும் வடமாகாண பிரதம செயலாளரது NP/09/FRM/R2/10/CIR.REV/2022 ஆம் இலக்க 08.04.2023 ஆம் திகதிய கடிதம் என்பனவற்றிற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத் திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ்க் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 221 6468, 021 222 2019) என்னும் முகவரியிலிருந்து **13.10.2023 ஆம் திகதியில் இருந்து 26.10.2023 ஆம்** திகதி வரை காலை 9.00 மணிக் கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3,500.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து (மூலப்பிரதி மற்றும் பிரதி தனித் தனி உறைகளில்) **தலைவர், பிராந்தியப் பெறுகைகள் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு **27.10.2023 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபால் மூலமாக அல்லது நேரடியாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டிக்குள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல்வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கேள்வி செல்லுபடியாகும் காலமானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்

08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி தொடர்பான முன்னோடிக் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 19.10.2023 ஆம்திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து வேலைத் தலங்களுக்கான களத்தரிசிப்பு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | நிதி | கேள்வி செல்லுபடி யாகும் | | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படு ம் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட் கள் | திகதி | | | பாதுகாப்புப் பிணைதொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/CF/ Package I/ 2023-51 | Improvement and Construction of Roads under ward no: 01, 08, 09 & 10 | 6.944 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 and C6 | 70,000.00 | 09.02.2024 |
| 2 | JMC/WD/CF/Pac kage II/ 2023-52 | Improvements of roads & Reconstruction of drainage work under ward 02, 11, 13, 14 & 15. | 7.896 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 and C6 | 80,000.00 | 09.02.2024 |
| 3 | JMC/WD/CF/Pac kage III/ 2023 - 53 | Improvements of roads & Reconstruction of drainage work under ward 03, 04 & 06 | 4.190 | CF | 63 | 29.12.2023 | 2 | C8,C7 and C9 | 42,000.00 | 26.01.2024 |
| 4 | JMC/WD/CF / Package IV/ 2023 - 54 | Improvements of ward based road, Construction & Renovation of drainage work under ward 16, 17, 18 & 19 | 6.570 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 and C6 | 66,000.00 | 09.02.2024 |
| 5 | JMC/WD/CF/ Package V /2023 - 55 | Improvement and Construction of ward based road and drain under ward 20, 21, 22 & 23 | 6.910 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 andC6 | 70,000.00 | 09.02.2024 |
| 6 | JMC/WD/CF/Packag e VI /56 | Improvement and Construction of ward based road, drain and common well under ward 24, 25, 26 & 27 | 7.320 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 andC6 | 74,000.00 | 09.02.2024 |
| 7 | JMC/WD/CF/ Retainingwall /2023 - 59 | Reconstruction of Sir.V.Duraisamy Road Retaining wall with cover slab | 6.088 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 andC6 | 61,000.00 | 09.02.2024 |
| 8 | JMC/WD/CF/Drai nage- Punkankulam/ 2023 - 60 | Construction of Drainage for Punkankulam Railway crossing near junction to Kachcheri East lane - Stage II | 6.275 | CF | 77 | 12.01.2024 | 2 | C8,C7 andC6 | 63,000.00 | 09.02.2024 |

**ஆணையாளர்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம்.**
**13..10.2023**

(cr.40761) (N.1)

# அடையாளம் காணப்படாத சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 13

4 அடி 8 அங்குலம் உயரமும் பொது நிறமுடைய ஊதா நிறச் சேலை அணிந்திருந்த ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ள நிலையில் அவரை அடையாளம் காண உதவுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர், ஸ்ரான்லி வீதியில் சடலம் இருப்பதை அவதானித்து மக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். யாசகம் பெறுபவரது சடலமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகின்றது. (அ-ஓ-26)

# 17 தமிழக மீனவர்கள் சென்னை திரும்பினர்!

யாழ்ப்பாணம், ஒக். 13

நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 17 தமிழக மீனவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தாயகம் திரும்பியுள்ளனர்.

இராமேஸ்வரம் மற்றும் ஜெகதாப்பட்டினத்திலிருந்து வந்து, இலங்கைக் கடற்பரப்பில் கடந்த 13ஆம் திகதி மீன்பிடித்த மூன்று விசைப்படகுகளையும் அதிலிருந்த 17 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து, ஊர்காவற்றுறை நீதிமன்றில் முன்னிலைப் படுத்தினர். இதனையடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மீனவர்களின் வழக்கு கடந்த செப்ரெம்பர் 27ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிபதி து.கஜநிதிபாலன் மீனவர்களை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18மாத சாதாரண சிறைத்தண்டனை என்ற நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட 17 மீனவர்களும் நேற்றுமுன்தினம் புதன்கிழமை விமானம் மூலம் கொழும்பிலிருந்து புறப்பட்டு, சென்னை விமான நிலையம் சென்றடைந்தனர். (அ-ஓ-100)

# மயிலத்தமடு விவகாரம்: 3 நாள் காலக்கெடு


மட்டக்களப்பு, ஒக். 13

மட்டக்களப்பு மாவட்டம் மயிலத்தமடு, களிமடுக்குளம் பகுதியில் சிங்களக் குடியேற்றவாசிகள் அத்துமீறி நெற் செய்கை ஆரம்பித்துள்ள நிலையில், குறித்த விவகாரத்துக்கு 3 நாள்களுக்குள் உரிய தீர்வு கிட்டாவிடில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் குதிக்க உள்ளதாக தமிழ்ப் பண்ணையாளர்கள் கெடு விதித்துள்ளனர். (அ-ஓ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்...

மண்ணில் 15 - 07 - 1939



விண்ணில் 15 - 10 - 2020

## அமரர் கந்தர் வயித்திலிங்கம் இராசதுரை

(ஓய்வுநிலை சாலைப் பரிசோதனைக்குழு பொறுப்பதிகாரி இ.போ.ச கோண்டாவில் சாலை)

திதி – புரட்டாதி மாத அபரபக்க சதுர்த்தசி (13.10.2023)

அன்பின் திருவுருவே!
மீளாத்துயில் கொண்டு எமை
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்றீர்களே!
எட்டமுடியாத தொலைவு சென்று
ஆண்டுகள் மூன்றல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள் என்றென்றும்
நம்மைவிட்டு நீங்காது.

**உங்கள் ஆன்மா சாந்தியடைய**
**எம்குலதெய்வம் ஐயனாரை வேண்டி நிற்கும்**
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**இல 283, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்**

(CS 52471) (AK-1)

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 4:21

நிஜமானது 07 . 11 . 1994



நிழலானது 13 . 10 . 2012

## விஜயச்சந்திரன் டினேஸ்

(சென் ஜோன்ஸ் கல்லூரி. 2013 வர்த்தகப் பிரிவு மாணவன்)

என் செல்ல மகன் டினே !

எம்மை விட்டு பிரிந்து பதினொரு ஆண்டுகள் வெகு விரைவில் சென்று விட்டதையா?

பதினொரு ஆண்டுகள் அல்ல நூற்றொரு ஆண்டுகள் சென்றாலும் உனை மறக்க யாரும் இல்லை இவ்வுலகில்

எம் செல்லமகனே.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய் என்ற பொய்யாமொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க உன் தாய் தந்தையை மகிழ்வில் ஆழ்த்தினாய்.

உனை சுமந்தவலியை விட உன் பிரிவால் சுமக்கும் வலியை அறிவாயோடா?

ஒரே ஒரு மகனாய் நீ ஜனனம் ஆகி ஈரொன்பது வருடங்கள் இளைஞன் ஆகி எத்தனை வடிவத்தில் உனை பார்க்கநினைத்தும் எதுவுமற்ற வெற்றுக்கூடாய் ஏமாற்றத்துடன் நிற்கின்றோமையா?

கல்வியில் கரைகாண்பாய் சடுதியில் எம்மைவிட்டு எங்கே சென்றாய்?

ஆறமுடியவில்லை அழுது புலம்புகின்றோம் ஆறாக் கண்களுக்குள் நீயே தான் நிற்கிறாய்!

நேற்றுப்போல இருக்கிறது நினைவுகளோ அகலவில்லை
தேற்றுவார் இன்றி நாம் தேம்பி அழுகின்றோம்!
ஆண்டுகள் பதினொன்று ஆனாலும் உன் பிரிவை தாண்டமுடியவில்லை
தவிக்கின்றோம் நாம் இங்கு
மாண்டவர்கள் மீண்டதில்லை மனதிதனை மறுக்கிறதே ஆண்டவரின் பாதத்தில் அமைதிகொள்வாய் டினே!

இம் மண்ணில் உம்மை பிரிந்தாலும் விண்ணில் உம்மைக்
காண்போம் என்ற நம்பிக்கையில் மிகுதி நாட்களைக் கழிப்போம்
நீங்காத நினைவாய் என்றும் எம் உள்ளத்தில் உள்ளாய் மகனே!

(cs.52468) (N-1)

**38/46, சிவன் புது வீதி, மணல்தறை லேன், கந்தர்மடம்**

என்றும் உன் நினைவுகளுடன்
**பெற்றோர்**

# நாமலுக்கு மக்கள் ஆதரவு அவர் தலைவராக முடியும்

## கூறுகிறார் தந்தை மஹிந்த

கொழும்பு, ஒக். 13

நாமல் ராஜபக்சவுக்கு மக்களின் ஆதரவும் கட்சியின் ஆதரவும் இருப்பதாக பொதுஜன பெரமுனவின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.



ருமேனியாவில் உள்ள பொதுஜன பெரமுனவின் கிளையின் சில அதிகாரிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இன்று உலகில் பெரும்பான்மையானவர்கள் இளம் தலைவர்களாக உள்ளனர். அதனால் கட்சித் தலைவராகும் தகுதி நாமல் ராஜபக்சவுக்கும் உண்டு. மக்களின் ஆதரவும் கட்சியின் ஆதரவும் நாமல் ராஜபக்சவுக்கு இருப்பதால் அவர் நாட்டின் தலைவராக வருவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை - என்றார். (அ-ஒ-இ)

ஆங்கில / தமிழ் மொழிமூல
வகுப்புகள் வீடுகளுக்குவந்து கற்பித்தல்
**Home Visit Classes**
• English - Any Grade
• History / Geo / Civics - A/L வரை
• கணக்கீடு - A/L வரை
**077 331 6402**

# மரண அறிவித்தல்

## திரு. தில்லையம்பலம் விசுவலிங்கம்

(விஞ்ஞானப்பட்டதாரி - சென் பெனடிக் கல்லூரி கொழும்பு மற்றும் சென் ஜோசப் கல்லூரி யாழ்ப்பாணம் ஆகியவற்றில் ஆசிரியராகவும், கனடா சைவசித்தாந்த மன்றத்தின் தலைவராகவும், அன்பு நெறிச் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியராகவும் கடமையாற்றியவர்)

அன்னார் இலகடி வலந்தலை காரைநகரைப் பிறப்பிடமாகவும், அராலி, கொழும்பு, நைஜீரியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும், கனடாவில் வசித்து வந்தவருமாகிய தில்லையம்பலம் விசுவலிங்கம் கடந்த (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இளைப்பாறிய கல்லூரி அதிபர் நாகலிங்கம் முத்துமாரி தம்பதிகளின் அன்பு மருமகனும், வடிவழகாம்பாளின் அன்பு கணவரும், வாசுகி (அவுஸ்திரேலியா), விசுவபாரதி (கனடா), வடிவானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சக்தி கணபதி (அவுஸ்திரேலியா), யசோதா (கனடா), சந்திரிக்கா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அவுஸ்திரேலியா சிவகௌரி, அபிராமி, சரவணன் மற்றும் கனடா கவின், நிலான் ஆகியோரின் பாசமிகு பேரனும், மற்றும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, தேவராசா, தர்மலிங்கம், நாகேஸ்வரி, இரத்தினேஸவரி மற்றும் இராஜேஸ்வரி (அவுஸதிரேலியா்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான பாக்கியம், ஞானாம்பிகை, இந்திராணி, மகேசன், திருவாதிரை மற்றும் கணேசமூர்த்தி (அவுஸ்திரேலியா), சிவராஜா (அவுஸ்திரேலியா), நடராஜா (இலங்கை) ஆகி யோரின் அன்பு மைத்துனரும், சகுந்தலாதேவி (அவுஸ்திரேலியா), கெங்காதேவி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகலரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வியாழக்கிழமை (12.10.2023) பி.ப 5.00 மணி தொடக்கம் 9.00 மணிவரையும் பார்வைக்கும், வெள்ளிக்கிழமை (13.10.2023) மு.ப 9.00 மணி தொடக்கம் 12.00 மணிவரையும் ஈமக்கிரியை நடைபெற்று தகனம் செய்யப்படும்.



முகவரி:
St John's Dixie cemetery and crematorium
737 Dundas St E
Mississauga, ONL 4Y 2BS.

தகவல் :
**கணேசமூர்த்தி குடும்பம்**

தொடர்புகளுக்கு:

| | | | |
|---|---|---|---|
| வடிவழகாம்பாள் | (மனைவி) | கனடா | 001416 949 0375 |
| வாசுகி | (மகள்) | அவுஸ்திரேலியா | 0061 421 025 331 |
| விசுவபாரதி | (மகன்) | கனடா | 001 647 824 3403 |
| வடிவானந்தன் | (மகன்) | கனடா | 001 416 804 1254 |
| ராஜேஸ்வரி | (சகோதரி) | அவுஸ்திரேலியா | 0061 468 818 156 |
| சிவராஜா | (மைத்துனர்) | அவுஸ்திரேலியா | 0061 469 119 044 |
| நடராஜா | (மைத்துனர்) | இலங்கை | 0094 212 051 457 |
| அன்னபாக்கியம் | | இலங்கை | 0094 777 802 711 |

(cs. 52469) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இளையதம்பி தவமணிதேவி

பிறப்பு 16-09-1956 இறப்பு 10-10-2023

வன்னியசிங்கம் வீதி ஆவரங்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி தவமணிதேவி அவர்கள் கடந்த 10.10.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மல்லிகாதேவி, கமலாதேவி, பாலசுப்பிரமணியம், சவுந்தலாதேவி, ரோகினி, திரிபுரவதனி, தெய்வேந்திரம், துரைராசசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பத்மநாதன், சற்குணதேவி, காலஞ்சென்ற குலேந்திரன், நடராசா, ராஜா, சிவரூபி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று ஆவரங்கால் கரதடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 7716407

Cr 40763 M-1

# கொன்சியூலர் பிரிவுக்கு வருவோர் ஒன்லைனில் வரவை உறுதிசெய்க

யாழ். மாவட்டச் செயலகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.13

யாழ்.மாவட்டச் செயலகத்திலுள்ள கொன்சியூலர் பிரிவுக்கு வரும் மக்கள் மின்னியல் சந்திப்பு (ஒன்லைன்) முறைமூலம் முன்பதிவு செய்து வரவை உறுதிப்படுத்திய பின்னரே வரவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்னியல் சந்திப்பு நியமன முறைமையானது, கொன்சியூலர் அலுவல்கள் பிரிவு மற்றும் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறையிலுள்ள அதன் பிராந்திய கொன்சியூலர் அலுவலகங்களில் ஆவணங்களை அத்தாட்சிப்படுத்துவதற்கான இணையவழி அனுமதிகளை வழங்குகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள கொன்சியூலர் பிரிவு நாளொன்றுக்கு 75 பேருக்கு மட்டும் மின்னியல் அனுமதிகளை வழங்குகிறது.

தற்போது கனடா நாட்டுக்குச் செல்வதற்காக பலர் அங்கு ஒன்லைன் அனுமதிகளைப் பெறாது வருவதால் திரும்பிச் செல்லும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அந்தவகையில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் https://echannelling.com/ministryofforeignaffairs மற்றும் www infa gov. lk தொடர்பு கொண்டு உறுதிப்படுத்துவதன் மூலம் வீண் அலைச்சல்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அல்லது 228 அல்லது 1228 இற்கு அழைத்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-20)

# இளங்கலைஞர் விருது விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 13

யாழ்ப்பாணப் பிரதேச கலாசாரப் பேரவையால் கலைத்துறைக்கு ஆற்றியசேவைக்கு வழங்கப்படுகின்ற இளங்கலைஞர் விருதுக்கு யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் கலைப்பணியாற்றிய கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த விருதுக்கு 18 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட ஏற்கனவே இளம் கலைஞர் விருதுக்கு கலைத்துறைச் சான்றிதழ் மற்றும் விருது பெற்றுக் கொள்ளாத யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பத்துடன் உரிய கலைத்துறையை சான்றுபடுத்தும் ஆவணப்பிரதிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு யாழ்.பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான எஸ்.சுதர்சன் தெரிவித்தார். (ச)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 09 - 1948



மறைவு 12 - 10 - 2023

## சிவனேசன் மல்லிகாதேவி

ஏழாலை மத்தி கண்ணகிபுரத்தைப் பிறப்பிடமாகவும் 826/13 K.K.S வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவனேசன் மல்லிகாதேவி (ஓய்வு பெற்ற குடும்பநல உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (12.10.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவனேசன் அவர்களின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை சின்னம்மா ஆகியோரின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் சிவஞானவல்லி ஆகியோரின் மருமகளும் மயூரன் (நெதர்லாந்து), தக்சாயினி (கலாசார உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் ஊர்காவற்றுறை), மதிவதனி (தேசிய சேமிப்பு வங்கி – வடபிராந்தியம்) ஆகியோரின் தாயாரும் அருண்ஜா (நெதர்லாந்து), மேஜர் செல்வகுமார் (நிலையப்பொறுப்பதிகாரி - தேசிய இளைஞர் படையணி மன்னார்), திருக்குமார் (பிரதம கணக்காளர் - கரையோர பாதுகாப்பு திணைக்களம் கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் ஆராதனன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), ஆருக்ஷா (வேம்படி மகளீர் கல்லூரி), அக்ஷரா (யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை), தஸ்விகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), யதுமிகா (எவர்சைன் கிஸ்ட் வேள்ட்), அஞ்நுறா, நசேனவிஸ், ஆசியா (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புப் பேத்தியும், பரமேஸ்வரி, அமரர் புஸ்பராணி பராசக்தி, திருக்குமார், அமரர் திருச்செல்வம், ஜெயந்தி, ஶ்ரீமாலதி, சாலினி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.10.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

826/13, K.K.S வீதி,
யாழ்ப்பாணம்

தகவல் :
குடும்பத்தினர்.
077 069[illegible], 077 314459[illegible]

(CS 26547 M-1)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 07 • 09 • 1952



மறைவு 24 • 09 • 2022

## அமரர் வல்லிபுரம் சற்குணசிங்கம்

(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

**திதி: 13.10.2023**

என்றும் எங்கள் தலைவனாய்
அன்புடனே பண்பைச் சொல்லி
கண்டிப்புடன் கண்ணியமாய்
வழி நடத்திய அன்புக் கணவரே !

பாசமுள்ள அப்பாவே !

நற்குணத்துடன் என்றும் சற்குணசிங்கம்
என்ற நாமத்துக் கேற்றாற் போல
வீரமுடன் இறை அழகுடன் –
ஊர் போற்ற வாழ்ந்தீர்களே !

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
என்று எல்லோர் மனம் போலும்
பெருமையுடன் வாழ்ந்த குல விளக்கே !

உயிர் தந்து உயிரெழுத்தாய்
எம்முயிர் காத்து கண்கண்ட தெய்வமாய்
கண் முன்னே வாழ்ந்தீர்களே !

பேரப்பிள்ளைகள் வளர்ந்துவரும்
வேளையில் கூட இருக்காமல்
எம்மை ஆறாத்துயரில் விட்டு
மீளாத்துயில் கொண்டீர்களே !

ஒவ்வொரு நாளும் உங்கள் அன்புமுகம்
காணாது உங்கள் குரல் கேட்காது
ஏங்கித் தவிக்கின்றோம் அப்பா !

அப்பப்பா எங்கே? தாத்தா எங்கே?
என்று மழலைச் செல்வங்கள் கேட்கையில்
"கோயிலுக்குப் போய்விட்டார் வருவார்"
என்று கூறும் போது நெஞ்சு வலிக்கிறதே ?

நீங்கள் எங்களை விட்டுச் சென்று
ஓராண்டு ஆகிவிட்டது ஆன போதும்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
வானுயர்ந்த தெய்வமாய் எங்கள் முன்
நிழலாக சுவாசிக்கும் காற்றாக இருந்து
எம்மை வழி நடத்தி எம் நலம் காக்க
வேண்டும் என்று உங்கள் அன்பு போற்றி
உங்கள் அன்பு பாதங்கள் வேண்டி
உங்கள் ஆத்மா சாந்தியடைய

எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!**

**என்றும் உங்கள் பிரிவால் வாடும்**
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**இல.-81, மயிலணி, சுன்னாகம்.**

# ஆன்மிகப் பிரசாரகர்களுக்கு கற்கைநெறி நாளை ஆரம்பம்

யாழ், ஒக்.13

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் ஆன்மிகப் பிரசாரகர்களுக்கான சான்றிதழ் கற்கை நெறி (நான்காவது அணி) ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய.அநிருத்தனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர் ச.லலீசன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படி...

ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமை மாநாட்டிலும் இலங்கை இராணுவம் போர்க்குற்றம் இழைத்ததாகக் குற்றம் சாட்டப்படுவதனால், அதற்குப் பதில் அளிக்கவும், போரின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் நோக்கத்திலுமே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என சரத் வீரசேகர மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் நடைபெறும் ஒவ்வொரு மனித உரிமை அமர்வுகளிலும் இலங்கையில் போர்க்குற்றங்கள் இடம்பெற்றதாகப் பல்வேறு வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். சர்வதேசமல்லாத ஒரு ஆயுதப் போராட்டமே இலங்கையில் இடம்பெற்றது. எனவே, நாட்டில் எவ்வாறானதொரு போர் இடம்பெற்றது என்பதை விளக்கும் வகையில், எமது மேற்பார்வைக் குழுவின் பங்களிப்புடன் ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா மனித உரிமைக் குழுவுக்கு இப்போதேனும் நாம் உண்மை நிலையைப் புரிய வைக்கவேண்டும். இதனால், தேசியப் பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளது-என்றார். (அ-ஒ-44)

## பிரம்படிப்...

நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டு ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

1987ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களில் இந்திய இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட 'ஒப்பரேசன் பவான்' நடவடிக்கையில் பிரம்படிப் பகுதியில் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் என 50க்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ச)

## விவசாயக்...

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் விடுவிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்ட காணிகளில் காணியற்ற மக்களை குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவர்களுக்கு யு.என்.டி.பி. வீட்டுத் திட்டமும் வழங்கப்படவிருக்கின்றது.

காணிகளை மேலதிகமாக விடுவிப்பது தொடர்பில் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்துள்ளோம். உடனடியாகப் பதில் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், அதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

விவசாயக் காணிகளை விடுவிக்கக் கூடியதாக இருந்தால் அது விவசாயிகளுக்கு இந்தப் போகத்துக்கு உதவியாக இருக்கும் என்று கூறியிருக்கின்றோம்.

இன்னமும் 3 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலம் உள்ளிட்ட காணிகள் படையினர் வசம் உள்ளன. விவசாய நிலங்களை விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கின்றார். ஆனால், இன்னமும் இதுகுறித்து பாதுகாப்புத் தரப்பிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தப் போகத்துக்கு ஒரு தொகுதி விவசாயக் காணிகள் விடுவிக்கப்படுவதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன - என்றார். (அ-ஒ-125)

## சீனப்...

உறுப்பினர் ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் சீனா செல்கின்றார். சீனாவின் எக்ஸிம் வங்கி, கடன் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கும் எனக் கூறியுள்ளது. சீனாவின் இந்த ஒத்துழைப்புடன் புதிய மாற்றமொன்று ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதியின் சீனப்பயணத்தின் பின்னர் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து கடன் மறுசீரமைப்பை முடிவுக்கு கொண்டுவரலாம். இது மிகப் பெரிய வெற்றியாகும். ஜனாதிபதியின் சிறந்த வெளிவிவகாரக் கொள்கையால்தான் இந்த பலன் எல்லாம் கிடைக்கின்றது' - என்றார். (அ-ஒ-44)

## மீண்டும்...

துள்ளது. இதுதொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவருமான சரத் வீரசேகர நேற்றுத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் வாலை மட்டும்தான் அழித்துள்ளோம். அதன் தலை உள்ளிட்ட ஏனைய பகுதிகள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து இன்னமும் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. தமிழ்ப் பிரிவினைவாத புலம்பெயர் அமைப்புகள், தங்களின் கனவை இன்னமும் விடவில்லை.

தோட்டாக்களால் பெற்றுக்கொள்ள முடியாதுபோன தமிழீழத்தை, '13'இன் ஊடாகப் பெற்றுக்கொள்வதே இவர்களின் இலக்காகும். இதனால்தான், நாம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதாக ஜெனிவாவில் இவர்கள் குற்றஞ்சாட்டி வருகிறார்கள். அத்தோடு, வடக்கு - கிழக்கிலுள்ள பௌத்த புராதன சின்னங்களை அழிக்கும் செயற்பாடுகளிலும் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

பயங்கரவாதத்தை நாம் கட்டமைப்பு ரீதியாக இல்லாதொழித்தாலும், அவர்களின் ஈழக் கனவு இன்னமும் இருப்பதனால், எமக்கு இன்னமும் அச்சுறுத்தலான சூழல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த நிலையில்தான் மீண்டும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தலைதூக்கி வருவதாக இந்தியாவிலிருந்து எமக்கு புலனாய்வுத் தகவல் ஒன்று கிடைத்துள்ளது. இது தொடர்பாக இராணுவப் புலனாய்வுத் துறையினர் ஆராய்ந்து வருகின்றனர் - என்றார். (அ-ஒ-இ)

## புலிகள்...

களில் வவுனியா நீதிவான் வசீம் அஹமட் மேற்பார்வையில் நேற்று அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளப்பட்டன.

தனியார் காணியில் ஆயுதங்கள் மற்றும் தங்கம் புதைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மூன்று இடங்களில் இவ்வாறான அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இறுதிப்போரின் போது மேற்படி இடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முகாம் இருந்ததாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்ற உத்தரவின்பேரில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் வெடிகுண்டு செயலிழப்புப் பிரிவு பொலிஸ் குற்றத்தடுப்பு விசாரணை ஆய்வக அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பூவரசங்குளம் பொலிஸார் இணைந்து அகழ்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

பல மணிநேரம் அகழ்வு மேற்கொள்ளப்பட்டபோதும் ஆயுதங்களோ அல்லது வேறு எதனையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தோண்டப்பட்ட இடங்களில் எதுவும் கிடைக்காததால், மீண்டும் தோண்டப்பட்ட இடங்களை மூட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் வசீம் அஹமட் உத்தரவிட்டார். (அ-ஒ-100)

## வடக்கின்...

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுடன் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் வடமாகாண மக்களின் வாழ்க்கை முறையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாகவும் சிறந்த எதிர்காலம் தெரிவதாகவும் பிரிட்டன் அமைச்சர் கூறியிருந்தார்.

வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் அன் மேரி பெலிண்டா ரவேலியனுக்கு ஆளுநர் விளக்கமளித்தார். வடமாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மக்களின் வாழ்வை கட்டியெழுப்புவதற்கும் முழுமையான ஆதரவை வழங்குவதாக பிரிட்டன் அமைச்சர் தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ரூ பட்ரிக்கும் கலந்துகொண்டார். (அ-ஒ-20-26-100)

## எந்தவித...

திட்டமிடப்பட்டது எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் டிஜிற்றல் தடயவியல் பிரிவு அரசாங்கத்திடம் சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் 25ஆம் திகதி இந்தியா செல்வதற்கு நீதிபதி விடுப்புக் கோரி விண்ணப்பித்தபோது, அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, செப்ரெம்பர் 24ஆம் திகதி அவர் திடீரென வேறு நாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டார் என்று அந்த அறிக்கை கூறுகிறது. இந்தச் சம்பவத்தின் பின்னணியில் ஒழுங்கமைக்கப்பட்ட ஏதேனும் குழுக்களின் செல்வாக்கு இருக்கிறதா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீதிபதி சரவணராஜாவின் மனைவி, முல்லைத்தீவு மேலதிக நீதிபதி டி.பிரதீபன், முல்லைத்தீவு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் அமரதுங்க, பொலிஸ் தலைமையக பதில் ஆய்வாளர் திலகரட்ன, நீதிபதியின் தனிப்பட்ட பாதுகாப்பு பொலிஸ் அதிகாரி கே.எஸ்.பிரேமன், தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரி கே.சிவகாந்தன், முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் பொலிஸ் அதிகாரி எம்.முதீசன், முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரிகள் சமரக்கோன் மற்றும் சந்தருவன், முல்லைத்தீவு நீதிமன்ற பதிவாளர் பீ.சரவணராஜா, நீதிபதியின் அலுவலக எழுத்தாளர் பீ.சுசிகன், பிஸ்கால் எஸ்.சிவகுமார் மற்றும் முல்லைத்தீவு நீதிமன்ற உத்தியோகத்தர் ஜே.லின்டன் ராஜா ஆகியோரிடம் சம்பவம் தொடர்பில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன. இருப்பினும் நீதிபதி சரவணராஜா தனக்கு எதிராக அச்சுறுத்தல்கள் இருப்பதாக ஒருபோதும் குறிப்பிட்டதில்லை என அவர்கள் தெரிவித்தனர்.

முல்லைத்தீவின் முன்னாள் மாவட்ட நீதிபதி சரவணராஜா 2021ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி முல்லைத்தீவு நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளதாகவும், முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அவருக்குத் தேவையான சகல பாதுகாப்பையும் வழங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த நேரத்திலும் பாதுகாப்பு அல்லது உயிருக்கு ஆபத்தான பிரச்சினை எதுவும் எழுப்பப்படவில்லை. விசாரணையில், நீதிபதி செப்ரெம்பர் 24ஆம் திகதி டுபாய்க்குச் சென்றார் என்பது தெரிய வந்துள்ளது. அதற்காக குருநாகல் விற்பனைப் பிரதிநிதி ஒருவரிடமிருந்து எயார் அரேபியா விமானப் பயணச்சீட்டுகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அமெரிக்க தொலைபேசி இலக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொடுக்கப்பட்ட தொலைபேசி எண் செயற்படவில்லை என்றால் மீண்டும் அழைக்க பயணச்சீட்டு விற்பனை முகவருக்கு கென்ய தொலைபேசி இலக்கம் ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பகுதியில் இருந்து விமானப் பயணச்சீட்டுக்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது. சார்ஜா, நைரோபி, டில்லி வழியாக ஒக்ரோபர் 12ஆம் திகதி இலங்கை திரும்புவதற்கு பயணச்சீட்டு பெறப்பட்டது. விமான நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தகவலின்படி, சார்ஜாவை அடுத்து நைரோபிக்கு செல்ல நீதிபதி விமான பயணச்சீட்டை பயன்படுத்தவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் நீதிபதியின் வெளிநாட்டுப் பயணம் முன்கூட்டியே திட்டமிடப்பட்டது என்பது தெளிவாகின்றது. சேவையிலிருந்து இராஜினாமா செய்த பின்னர் உத்தியோகபூர்வ கடவுச்சீட்டைப் பயன்படுத்துவது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

மாவட்ட நீதிபதியின் மனைவி, தனது கணவர் நீதிபதி என்ற முறையில் கடுமையான மன அழுத்தத்தில் இருந்தார் எனவும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதுகாப்புக் குறைபாடு குறித்து அவர் குறிப்பிட்டுள்ளார் எனவும் தெரிவித்தார். எனினும் சமீபகாலமாக அவ்வாறான பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் தன்னிடம் கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

செப்ரெம்பர் 23ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் தனது கணவர் வெளியேறினார் எனவும், அவர் வெளிநாடு செல்வது தனக்குத் தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ஒ-இ)

## இளம்...

6 நாள்களாக காய்ச்சல் நீடித்த நிலையில் கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். அங்கு நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உ.கிழங்கு விதையில்லை
# பயிர்ச்செய்கை பாதிப்பு

### யாழ். விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 13

உருளைக்கிழங்கின் விதைக்கிழங்கு இந்தமுறை இறக்குமதி செய்யப்படாமையால் யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்குப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று யாழ். மாவட்ட விவசாயப்பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ். மாவட்டத்தில் ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு பெப்ரவரி மாதமளவில் அறுவடை செய்யப்படுவது வழமை.

இந்தநிலையில் இந்த விதைக் கிழங்கு இந்தமுறை இறக்குமதி செய்யப்படாததால் வழமைபோல் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் 3 ஆயிரம் விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளமுடியாதுள்ளனர்.

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விதைக்கிழங்கே சிறந்த விளைச்சலை வழங்குகின்றது.

இதனால் திணைக்களம் வழங்குகின்ற விதைக்கிழங்குகளைப் பெறுவதற்கு விவசாயிகள் பின்நிற்கின்றனர்.

இறக்குமதிசெய்யப்படும் விதைக்கிழங்கின் மூலம் ஒரு ஹெக்ரேயரில் 15 மெற்றிக் தொன் உருளைக்கிழங்கை பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார். (ச-125)


**விற்பனை பிரதிநிதி தேவை**

சாவகச்சேரியில் இயங்கிவரும் Laugfs Gas Distribution இற்கு விற்பனை பிரதிநிதி (ஆண்கள்) தேவை
வயதெல்லை - 19 - 30
(ஏ.26548) (M.1)

**077 2250 149**



**பணிநிலை வெற்றிடம்**
**உடனடி வேலைவாய்ப்பு**

1) Accountant / கணக்காளர் - முன் அனுபவம் உள்ளவர் மட்டும்
2) Assistant Accountant - உதவிக்கணக்காளர்
3) House keeping staff - சுத்திகரிப்பாளர்

நேர்முகத்தேர்வு :
15/10/ 2023 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி
**நியூ சன்றைஸ் மெடிகிளினிக்.**
**580, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**
தொடர்பு : 076 976 7447 / 076 255 5529
021 222 6069



**மாபெரும் திறப்பு விழா**


K & P FAMILY RESTAURANT

**K & P Family Restaurant**

ஞாயிறு - ஒக்ரோபர் - 15 - 2023 | 11.01 AM

A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

077 043 9980 , 021 228 6080



முதல் 100 வாடிக்கையாளர்களுக்கு

சிலைஸ் பீட்சா( Slice Pizza )

வரவேற்புபானம் ( Welcome Drink )

**இலவசம்.**




# சண்டிலிப்பாயில் இன்று பண்பாட்டுப்பெருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.13

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் பண்பாட்டுப்பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான யசோதா உதயகுமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணப்பண்பாட்டலுவல்கள்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஷ், யாழ்.மாவட்டச் செயலக சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் சுகுணாளினி விஜயரட்ணம் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

# மனிதத் தலை நேற்று மீட்பு

கொழும்பு. ஒக்.13

பமுனுகம பழைய அம்பலம கடற்கரையில் துண்டிக்கப்பட்ட மனிதத் தலை ஒன்று நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட தலை அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் பமுனுகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)


# மரண அறிவித்தல்

தோற்றம்
08
-
10
-
1948



மறைவு
12
-
10
-
2023

**தர்மலிங்கம் சிவசுப்பிரமணியம்**
**(சற்குணம்)**

வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் புளியங்கூடல், திருமலை, பிரம்படி கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவசுப்பிரமணியம் (சற்குணம்) 12.10.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் செங்கமலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நல்லையா பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், இராசரத்தினம் (செல்வராசா), பரமேஸ்வரன், திவ்வியரத்தினம் கந்தசாமி, செல்வராணி கந்தவேள், சுசிலாதேவி மகேந்திரராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பவளரத்தினம், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் சிவராஜா, ஈஸ்வரராஜா, சறோஜினிதேவி, சிவானந்தராஜா, சற்குணராஜா, பத்மினி, பத்மநாகபூசனி (சுதா) ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (13.10.2023) வெள்ளிக்கிழமை பிரம்படி ஒழுங்கை, கொக்குவிலுள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 7555061
077 1426251
076 3049508

தகவல் :
குடும்பத்தினர்.
பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.

(CS 26546 M-1)


### காணாமல் ஆக்கப்பட்ட

# மகனைத் தேடிய தந்தை சாவு

வவுனியா, ஒக். 13



வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனைத் தேடிய தந்தை ஒருவர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

மகாறம்பைக்குளம் சிறிராமபுரத்தைச் சேர்ந்த முத்தையா ஆறுமுகம் (வயது -65) என்றதந்தையே நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மகனான ஆறுமுகம் சிவகுமார் கடந்த 2007ஆம் ஆண்டு வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டிருந்தார். அவரைத் தேடி வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் இவர் கலந்து கொண்டு தனது மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு போராடியிருந்தார். இந்நிலையில் மகனைக் காணாமலேயே அவர் உயிரிழந்துள்ளார். (அ-ஒ.18,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.